www.padippakam.com

# காகம்

Kakam



1 Januar 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

– ஒரு தாய்

## முகம்

### புலம்பெயர் நாடுகளில் தமிழ் முன்னெடுப்புக்கள்

இப்போதுதான் இந்த முகத்தைப்பார்க்கின்றீர்கள். சுமார் ஏழு வருடங்களுக்கு முன்னர் தொடங்கத்திட்டமிடப்பட்ட முயற்சி இதுவாகும். அக்காலங்களில் வெளிவந்துகொண்டிருந்த சஞ்சிகைகளோடு இன்னொன்று புதிதாக தோன்றவேண்டிய தேவை ஒன்றுண்டா? என்னும் கேள்விக்கான பதிலும்; இதுவரைகாலமும் வெளிவரா திருந்தமைக்கான காரணமாகும்.

ஆனால் இந்த 7ஆண்டு காலப்பகுதிக்குள் சஞ்சிகைகள்தொடர்பாக கிடைத்த அனுபவங்கள் இன்றையநிலையை தோற்றுவித்துள்ளது எனலாம்.

அத்தகையஅவசரத்தேவையொன்றின் முக்கியத்துவத்தினை டென்மார்க்கில் பலரும் உணர்ந்திருந்தாலும், அத்தேவைகள் பற்றி அவதானிக்கப்பட்டு ஆலோசிக்கப்பட்டாலும் அவற்றை இங்கு பட்டியலிட்டுக்கொண்டு இந்தக் காகத்தின் தோற்றத்தினை நியாயப்படுத்துவதன்று இப்பந்தியின்நோக்கம்.

மாறாக அகதிவாழ்வில் அகப்பட்டுக்கொண்ட ஈழத்தமிழர்களின் ஒருபிரிவுச்சமூகமான இச்சமூகத்திடை வளர்த்தெடுக்கப்படவேண்டிய கருத்துலகம் என்பதும், அச்சமூகத்தை தயார்நிலைப்படுத்தவேண்டிய நடைமுறைக்கூறுகளும் வேறானவையாகவும், இருப்பதோடு அதேவேளை இப்புதியசூழலுள் தமிழுலகம் தன்னுள் உள்வாங்கிக் கொள்ளவேண்டியவையும், சர்வதேசச்சமுதாய சிந்தனைக்குள் தன்னை வளர்த்துக்கொள்ள உள்ள இச்சந்தர்ப்பம் பயன்பாடுடையதாதல்வேண்டும் என்கின்ற நோக்கில் பத்திரிகைச்சிந்தனாவிரிவாக்கம் ஒன்று தேவையென இங்கு உணரப்படுகிறது.

புலம்பெயர்நாடுகளில் சஞ்சிகைகளின் தோற்றத்திற்கான காரணங்களை கண்டறிய வரிந்து கட்டிக்கொண்டு புறப்படுவதிலும், ஏதோ ஒருவகைமுரண்பாடுகளை காத்தும், அதில்சார்ந்துநின்றும் விளக்கமளிக்கும்தேவையை வெறுக்கின்ற காரணத்தால் காகத்தின்தோற்றத்தை " படிக்கத்தான்" என்னும் பொதுவலையத்துள் அடக்கிவிடலாம்.

புலம்பெயர்நாடுகளில் தமிழின்பேரால் முன்னெடுப்புக்கள் பல வடிவங்களில் தோன்றுகின்றன. இவற்றினை சங்கோசப்படாமல் உற்றுநோக்கினால் அவை:

ஒன்று தமிழின் ஆசைகளாகவும்



படிப்பகம்

www.padippakam.com

மற்றையது தமிழின் தேவைகளாகவும் உள்ளன. இதில் துரதிஸ்டம் என்னவென்றால் தமிழின் ஆசைகளுக்கான முன்னெடுப்புக்களே அதிகமாக உள்ளதுடன் அத்தொகுதியினரே அதிகரித்தும் வருகின்றார்கள். இதுஒருபுறமும்;புலம்பெயர் வீடுகளில் விரிக்கப்பட்டுள்ள (சராசரியாக 25 – 30) சமூகமாற்றமெனும் தேவையின் வேர்களைமறைக்கும்படியாக பாலியல், அரட்டை,பொழுதுபோக்கு, சினிமா.......எனும் சீரழிவுகளை உள்ளடக்கிய தொலைக்காட்சி மாயமானும்; முற்றும் பழக்கமற்றதொரு இயந்திரத்தொழிற்துறைசார்ந்த சமூகத்தினுள் புதைக்கப்பட்ட வாழ்வின் நெருக்கடிகளும்;தாயகத்தொலைவும் சூழ்ந்துள்ள புலம்பெயர்ந்த தமிழ்மக்களை நாம் சஞ்சிகைவடிவத்துள் கருத்துக்களுடன் சென்றடைவது என்பது கடினமானதுதான் ஆயினும் ......
சமூக, பொருளாதார, அரசியல் கண்கோட்டத்தில் வைத்து எமது அகதிவாழ்வின்முன்னுள்ள எச்சரிக்கை களையும், சவால்களையும் முன்னிறுத்திப்பார்ப்போமானால் வளர்த்தெடுக்கப்படவேண்டிய கருத்துலகத்தின் அவசரச்சிந்தனையீர்ப்பினை நாம் கொண்டிருக்கின்றோம் என்ற கவனத்திற்குரிய உண்மை புலப்படும்.

இந்தப்பக்கத்தில் எதனையும் முன்மொழியவோ அன்றி உறுதிகூறவோ விருப்பமில்லை.

"காலம் மாறிக்கொண்டிருக்கிறது.........மாற்றம் காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது."

இதை நம்புபவர்கள்
எதற்கும் எப்போதும்
எந்தவேலிகளுமிடார்.

இந்தநேரத்திலாவது நாம் கடமையாற்ற ஒரு இடம் தேவை என்பதனை உணரமறுப்பதென்பது எமது எதிர்கால சந்ததியை தனித்துவிட்டதுபோலாகும்.

எம்முடன்தொற்றிக்கொண்டுள்ள இனஅடையாளங்களுக்காக எந்த வரலாற்று வழிப்போக்குகளை நேசிக்கிறோமோ அந்த வரலாற்றுக்கடமைகளில் நாமும் அடுத்த சந்ததிக்கு எமது இனஅடையாளங்களை விட்டுச் செல்லல்வேண்டுமே........

அதற்க்கு எல்லோரும் தயாராவோமாக.

இது தமிழின் ஆசையல்ல.

இது தமிழின் இன்றைய தேவை

∴∴∴

அட்டைப்படம்
என்னசொல்கிறது?
"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே"
~புறநானூறு~

உள்ளே..................


| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 7 | மனதோடு பேசுதல் |
| 8 | கோடைகாலஅறிவிப்பு |
| 9 | உருவகக்கதை |
| 11 | மலர்தல் வாடல் தெரிதல் |
| 13 | வீடும் வெளியும் |
| 15 | சிறுகதை |
| 19 | கட்டுரை |
| 22 | அறிவது |
| 23 | ஒடுக்கம் |
| 25 | தோப்புக்கரணங்கள் |
| 29 | கவிதைகள் |


ஒரு சமுதாயத்தின் வெற்றி அதன் பலத்தை அறிந்திருப்பதில் மட்டுமன்று; அதனது பலவீனத்தை அறிந்திருப்பதிலும், அதனை நீக்குவதிலும் அடங்கியிருக்கிறது.
க.பா.அறவாணன்



படிப்பகம்

www.padippakam.com

# H.C.ANDERSENனின் கதை

தமிழில்: திரு. சி.கருணாகரன்



***Andersen Hans Christian**, (2.4.1805 – 4.8.1875 ) .ஐரோப்பிய இலக்கிய உலகில் 1800 களின் தலைசிறந்த கவிஞராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். கவிதைகள், கற்பனைக்கதைகள், கதைகள்,பயணஅனுபவங்கள், வாழ்க்கைக்குறிப்புகள், என தனது இலக்கியங்கள் மூலமாக எழுத்துலகில்பிரகாசித்தவர். பிறப்பால் இவர் ஒரு டனிஸ் சமூகத்தவராக இருந்தாலும்: இவரது படைப்புக்கள் உலகின்125மொழிகளில்மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.தமிழில்......?*

## தேனீர்கேத்தல்

ஒருகாலத்தில் பெருமையுள்ள தேனீர்கேத்தல் ஒன்று இருந்தது. அது தான்செய்யப்பட்டிருந்த உயர்ரகமாபிளையும், நீண்டமூக்கையும், அழகானகைபிடியையும் எண்ணிப்பெருமைப்பட்டது.அதனுடைய முற்புறத்தில் மூக்கும் பின்புறத்தில் கைபிடியும் இருந்தது.ஆனால் அது தன்னிடமுள்ள உடைந்தும், கீறப்பட்டதுமான அந்தமூடியைப்பற்றி கதைப்பதில்லை. ஒருவரும் தம்மிடமுள்ள குறைகளைப்பற்றி கதைப்பதில்லை.ஆனால் அதனை மற்றவர்களே செய்வார்கள்.

தேனீர்க்கோப்பைகள், பால் மற்றும் சீனி போடும்பாத்திரங்கள் தேனீர்க்கேத்தலின் அழகான கைபிடியையும், மூக்கையும் விட்டுவிட்டு அதன் பழுதான மூடியைப்பற்றியே எப்போதும் சிரித்துக்கதைத்துக்கொண்டிருக்கும்.

"எனக்கு இவைஎல்லாம் தெரியும்" என்று அது தனக்குள் சொல்லிக்கொண்டது."எனக்கு என்னுடையகுறைகள் எல்லாம்தெரியும். அதனை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன்" இதனால் ஏற்படும் பணிவும், மனஅடக்கமும் எங்கள் எல்லோருக்கும் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வாருகொடை உண்டு. தேனீர்க்கோப்பைக்கு ஒரு கைபிடியும், சீனிச்சட்டிக்கு ஒரு மூடியும், எனக்கு இவ்விருஅம்சங்களுடன் முற்பக்கத்தில் அழகானஒருமூக்கும் உண்டு. இதனை அவர்கள் ஒருபோதும் பெறமுடியாது. எனக்குக்கிடைத்துள்ள அந்தமூக்கு தேனீர்மேசையை இராணி ஆக்குகின்றது. ஆனால் சீனிச்சட்டியையும், பால்சட்டியையும் நல்லசுவையான வேலைக்காரிகளென்று மெச்சுகின்றார்கள். இருந்தும்......வைத்திருப்பதும் நானே. கொடுப்பதும் நானே.

நான் தாகத்துடன்வரும் மனிதர்களுக்கு தாகத்தைத்தணிக்கின்றேன். என்னுடைய உட்புறத்தில் சுவையற்ற கொதிதண்ணீரில் சீனா இலைகளை (தேயிலை) பதம்செய்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தக்கதைகளையெல்லாம் அந்தத் தேனீக்கேத்தல் தன்னுடைய பசுமையான இள மைக்கால அனுபவங்களிலிருந்து கூறியது. அப்போது அங்கே அலங்கரிக்கப்பட்ட மேசையிலிருந்து மிகவும் அழகானஒரு கையினால்தூக்கப்பட் டது. அந்த அழகானகை கடினமாகவும்இருந்தது. தேனீர்க்கேத்தல் நிலத்தில் விழுந்தது. மூக்குஉடைந்து கைபிடி யும்முறிந்தது.

மூடியை ப்பற்றி கதைத்துப்பிரயோசனமில்லை. அதைப்பற்றி ஏற்கனவே நிறையக்கதைக்கப்பட்டுவிட்டது. தேனீர்க்கேத்தல் நிலத்தில் மயங்கிக் கிடந்தது.கொதிதண்ணீர் வெளியேறிக்கொண்டிருந்தது. விழுந்ததில் அதற்கு பலமானஅடி. இதில் கடினமானவிடையம் என்னவென்றால் அவர்கள் இருந்தபடியே கேத்தலைப்பார்த்து சிரித்தனர். ஆனால் அந்தக் கையைப்பார்த்துச்சிரிக்கவில்லை.

"இந்த நினைவு என்னைவிட்டு அகலாது" என்று தேனீர்க்கேத்தல் கூறியது. என்னைப்பலவீனமுள்ளவள் என அழைத்தனர். இவ்வாறு தனது வாழ்க்கைச்சம்பவத்தை சொல்லிக்கொண்டிருந்தது தேனீர்க்கேத்தல். இவள் இனிமேல் உபயோகமற்றவள் இதனைக்கொண்டுபோய் ஒருமூலையில்போடுங்கள் சாப்பாட்டுக்கு பிச்சைக்காரிவரும்போது கொடுக்கலாம். நான் வறுமையானவள், உட்புறமும் வெளிப்புறமும் உபயோகமற்றவளாகிவிட்டேன். என்னுடைய இந்த நல்வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர்; என்னுள் மண்போடப்பட்டு ஒரு தேனீர்க்கேத்தலை அடக்கம்செய்வதுபோல ஆக்கினார்கள். ஆனால் அந்தமண்ணில் பூவிதை வைக்கப்பட்டிருந்தது.

சீனாஇலைக்கும், கொதிதண்ணீருக்கும் பதிலாக யார் அதை எனக்குத்தந்தார்கள். அல்லது உடைந்தமூக்குக்கும், கைபிடிக்கும் பதிலாக தந்தார்களா? பூவிதை மண்ணில் வைக்கப்பட்டிருந்தது.ஆம் அப்பூவிதை என்னுள்வைக்கப்பட்டிருந்தது.என்னுடைய உயிர், இதயம் இவ்வாறு ஒருபோதும் இருந்ததில்லை. இது என் வாழ்க்கை. எனக்கு சக்தியும், பலமும் இருந்தது. இதயத்தில் துடிப்பு இருந்தது. பூவிதை துளிர்விட்டது. உணர்வுகளும் நினைவுகளும் என் நெஞ்சை பிளப்பதுபோலிருந்தது.அதுபூவானது.நான் அதைப்பார்த்தேன். அதை நான் தாங்குகின்றேன். அந்த இளமைக்குள் மறைந்திருந்தேன். மற்றவர்களுக்குள் மறைந்திருப்பது ஆசீர்வாதம். ஒரு கொடை. அது எனக்கு நன்றிசொல்லவில்லை. அது என்னை நினைப்பதில்லை. அது பாராட்டப்பட்டது.புகழப்பட்டது.நான் அங்கே மகிழ்ச்சியாக இருந்தேன்.யார்தான் அவ்வாறு இருக்கமுடியாது.

ஒருநாள் அவர்கள் கதைப்பதுஎன்காதுகளில்கேட்டது."நன்றாக வளர்ந்திருப்பதால் இந்தப்பூங்கன்றை இன்னொருசாடியில் வைக்கவேண்டும்." என்று.

என் நடுப்பகுதியை பிளந்தார்கள். இது எனக்கு மிகுந்தவேதனையை கொடுத்தது. ஆனால் பூங்கன்றோ நல்லசாடிக்குள் வந்துவிட்டது.என்னைத் தோட்டத்தில் வீசி எறிந்தார்கள்.

நான் பழையபாத்திரம்போல கிடந்தேன். என்நினைவுகள் என்னைவிட்டு அகலவில்லை. அதை நான் எப்போதும் இழக்கமாட்டேன்.







படிப்பகம்

www.padippakam.com

## மனதோடுபேசுதல்

செல்வன்



பகற்பொழுதிலேயே
இருட்டிவிடும் இத்தேசத்தில்
வாழ்வின் வெளிச்சம்பற்றி
எதைத்தான் நண்பா நான் எழுதுவது?

இங்கே
உதடுகள்
உள்ளங்களின் உறவின்றி
வார்த்தைகளை பிரசவிப்பதனையே
வாழ்க்கையாகக் கொண்டுவிட்டன.

சபைநிறைந்த
மனிதர்கள் மத்தியிலும்
மனதோடு பேசுவதில் மட்டுமே
சற்று ஆறுதல் கிடைக்கிறது.

பனிபடர்ந்த
இந்தப் பாதைகளில்
கவனத்துடன் நடந்துசெல்லும் வேளை
யிலும்.

நஞ்சை உண்ணும்
உணர்வுடன்
தினம் உண்ணும் உணவிலும்.

தவணை முறைகளில்
வந்துபோகும்
இன்றைய கனவிலும்.

பழைய
நினைவுகள்தான் நண்பா
என்மனதில் பவனி வருகிறது.

அப்போதெல்லாம்
சிரிப்பதற்கு
காரணங்களைத்தேடி
நாம் அலைந்திருக்கிறோமா?

எம்மைப்பொறுத்தவரை
காரண– காரியத் தத்துவங்கள்
அன்று அர்த்தமற்றதாகவே இருந்திருக்
கிறது.

மயிலிறகு
குட்டிபோட்டதற்கும்
மனம்மகிழ்ந்து விழா எடுத்திருக்கிறோம்.

கடலலைகள்
அடங்கிப்போனதற்கும்
ஊரைக்கூட்டி நியாயம் கேட்டிருக்கி
றோம்.

வட்டுமுற்றத்தில்
நிலவு வெளிச்சத்தில் அமர்ந்து
பெரியவர்கள் பேசிக்கொள்ளும்போது
அருகிலிருந்து அபிப்பிராயம்
கூறியதற்காய்
எத்தனைதடவைகள்
கண்டிக்கப்பட்டிருக்கிறோம்.

துடுப்பெடுத்தாட்டப்போட்டிகளில்
எம்மவர்கள்
சிக்சர்கள் அடித்தபோதெல்லாம்
பந்தோடுசேர்ந்து
நாமும் பறப்பதுபோலல்லவா
பரவசப்பட்டிருக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆறஅமர இருந்து
மனம்விட்டுப்பேசலாம் என்பதற்காகவே
நாம் ஒழுங்காக
கல்லூரிக்கு சென்றுவந்திருக்கிறோம்.

இரட்டைப்பதிவு
கணக்கியலில் மட்டும் இல்லை
கன்னியரின் கண்ணாடியிலும் உண்டு
என்று அங்கு பட்டிமன்றங்கள்
நடாத்தியிருக்கின்றோம்.

ஊரைச்சுற்றி
ஊர்வலம்வருவதில்
இந்தக்காற்றும்
எம்மிடம் தோற்றுப்போயிருக்கிறது.

புழுதி பறக்க
வளைந்து வளைந்து வளரும்
எம்மூர்த் தெருக்களிலெல்லாம்
எம் கால் தடங்கள்
நிறைந்துபோயிருக்கிறது.

தெருவோரம் இருக்கும் மரநிழல்கள்
தலைவிரித்தாடும் பனைமரங்கள்
கதைகள்பேசும் கடலலைகள்
இவை எல்லாம்
மனதில் பதிந்து போயிருக்கிறது.

எமக்கே உரிய சொந்தங்களை
நடந்து வந்த பாதைகளை
கடந்து வந்த இனிமைகளை
எவ்வாறுதாம் நண்பா நாம் துறப்பது?
உயிர் ரிடிப்பே அற்று
வாழ்வின் சுவையே அற்று – இங்கு
வாழ்ந்தபின்னால்
எவ்வாறுதாம் நண்பா நாம் இறப்பது.

"பக்கம் 7ல் இடதுபக்கம் 17வது வரியில் வீட்டுமுற்றத்தில் என திருத்தி வாசிக்க"

..........................இன்னும் வரும்.........

'கோடைகால அறிவிப்பு'



வி. எஸ். சிவநாதன்
வலவன்

பனிகலைந்து, குளிர் உறங்க
புத்துயிர்ப்புக்காய்
துளிர் அவிழ்த்து, மொட்டவிழ்க்க
வண்ணங்களும்,
வண்ணங்களுடன் பதுமையும்
தவழ்ந்துவரும்.

சூரியக்குளியலுக்காய்
வெண்சிட்டுக்களும்
வெண்சிட்டுக்களுடன்
அண்டங்காகங்களும்
ஆடையவிழ்க்கும் அவசியமும்,
அவதிகளும்..........
பனிகலைந்து, குளிர் உறங்க
புத்துயிர்ப்புக்காய்
துளிர் அவிழ்த்து, மொட்டவிழ்க்க
வண்ணங்களும்,
வண்ணங்களுடன் பசுமையும்
தவழ்ந்துவரும்.
பனிகலைந்து, குளிர் உறங்க
புத்துயிர்ப்பும்,
சூரியக்குளியலும் பொய்யாக
சுட்டெரிக்கும் வெய்யிலென
நானோ
**நிழல்தேடி! நிழல்தேடி!**



படிப்பகம்

www.padippakam.com

உருவகக்கதை

**குரங்குகளினால்,**
**குரங்குகளுக்காக,**
**குரங்குகளால்**..................கவிஞர் பாரதிபாலன்



உலகில்வாழும் உயிர்கள்அனைத்திலும் உயர்ந்தஅறிவுபடைத்தவன் மனிதனே. அவன் தனது அறிவுநுட்பத்தாலும், பலத்தாலும் உலகை கட்டி ஆழுகின்றான்."எல்லாம் தானே" எனும் எண்ணம் தலைக்கு ஏறும்போது அறிவு மங்கிப் போகிறது.அப்போது அகந்தை தலை விரித்தாட தனது கட்டுப்பாட்டிற்கு கீழே இருக்கும் ஏனைய ஜீவன்களை வருத்துவதில், எள்ளிநகையாடுவதில் அவன் திருப்தி அமைந்துவிடுகிறது.உலக வரலாறும் இத்தகையதன்மையின் வீட்சியை கூறிக்கொண்டுதான் இருக்கின்றது. இருந்தும் மனிதனது வழிவழிப்பயணம் தொடரத்தான் செய்கின்றது.

திருந்திய மனிதர்களின் கண்களில் மிருகங்கள் உள்ளிட்ட ஏனைய ஜீவராசிகள் கருணையின் வடிவங்களாக தெரிகின்றன. அப்போது அந்த ஜீவன்களுக்காக உயிர்வாழ்வதில் அர்த்தம் இருந்தும் கூட கைகள் கட்டப்பட்ட மனிதம் பரிதவித்து ஏங்குகின்றது.

இதுவே குரங்குகளினால்
குரங்குகளுக்காக
குரங்குகளால்.... கதையாகும்

அந்தக்காடு அழிக்கப்பட்டது.அங்கே நாடு ஒன்று மலர்ந்தது.காட்டுவிலங்குகள் கூடுகளுக்குள் அடைக்கப்பட்டன. அவை மனிதர்தம் களியாட்டுப்படைப்புகளாக காட்சிச்சாலைபோய்ச்சேர்ந்தன.அந்தவிலங்குகளை தங்கள்வழிக்குக்கொண்டுவரும் சித்திரவதைகள் தொடர்ந்தன.வேடிக்கைப்பொழுதுபோக்கினரும், தங்கள் கண்களாலும், பயமுறுத்தலினாலும் அந்த விலங்குகளை காயப்படுத்தினர்.

மிருகங்கள் அனைத்தும் தனக்குக் கட்டுப்பட்டுவிட்டது எனும் தப்புக்கணக்கு: அங்கிருந்து இருகுரங்குகள் தப்பிப்போக வகை செய்தன. தப்பிச்சென்ற குரங்குகள், வேறுகாட்டில் கவலையுண்டு ஒதுங்கிய ஏனையமிருகங்களை சந்தித்தன. அவை தாம் கண்ட நாகரிக மனிதர்தம் வேட்டைப்படலத்தை, விசமத்தை விலாவாரியாக்கூறின. முடிவில் மிருகங்கள் அனைத்தும் ஒன்றுகூடி ஒரு தந்திரம்



படிப்பகம்

www.padippakam.com

வகுத்தன.

ஒருநாள் அந்தக்காட்டிற்கும் அதே காட்சிச்சாலை வேட்டைப்பிரிவினர் வந்துவிட்டனர்.ஏற்கனவே எச்சரிக்கைபெற்ற மிருகங்களால் வேட்டைப்பிரிவினர் சுற்றிவளைக்கப்பட்டனர். பின்னர் காட்டுக்கொடிகளால் கட்டப்பட்டு தனித்தனி குகைகளில் அடைக்கப்பெற்றனர். குகைவாசலில் காவலுக்கு கொடியமிருகங்கள் அமர்ந்துகொண்டன. வேளாவேளைக்கு காட்டு உணவுகள் வந்துசேர்ந்தன.

அவ்வுணவுகளில் இருந்த ஏதோ ஒரு மூலிகையால் அவர்களது ஓமோன்சுரப்பி தூண்டப்பெற்றது.அதனால் உடலெங்கும் உரோமங்கள் உண்டாகத்தொடங்கின. வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் அம் மிருகங்களின் சிறைப்பராமரிப்பில் பேச்சுமொழிக்குப் பக்கத்துணை இல்லாது தவித்தனர்.

ஆண்டுகள் உருண்டன.சிறைப்பட்ட மனிதர்கள் பைத்தியங்களாயினர்.உடலெங்கும் உரோமங்கள்மூடிய அவர்களதுதோற்றம் மனிதக்குரங்கை ஒத்திருந்தது. இந்நிலையில் காவல் தளர்த்தப்பட்டது

அப்போதுதான் அவர்கள் ஒருவரைஒருவர் நேரில் சந்தித்தனர்.தங்களை வினோதமாய் பார்த்துக்கொண்டனர்.பேச்சுமொழியை மறந்த அவர்கள் கா....கூ....எனக் கத்திக்கொண்டே காடெல்டாம் அலைந்து திரிந்தனர்.தாங்கள் வேறுஇனம் என்ற சிந்தை மட்டும் அவர்களுக்குள் இருந்துகொண்டே இருந்தது.

ஒருநாள் மிருகக்காட்சிச்சாலையைச் சேர்ந்த வர்கள் அந்தக்காட்டிற்குள் நுழைந்தனர். அங்கே புதிய மனிதக்குரங்குகள் சில நடமாடுவதைக்கண்டனர்.

பல சித்திரவதைகளுக்கு மத்தியில் அம் மனிதப்பிராணிகள் கூட்டினுள் அடைக்கப்பட்டனர். மிருகக்காட்சிச்சாலைக்கு ஏற்றிச்செல்லப்பட்டனர். அப்போது அந்த மனிதஜீவன்கள் தாங்கள் வாழ்ந்த அந்தக்காட்டை ஏக்கத்துடன் பார்த்தனர்.பேச்சுமொழிமறந்த அவர்கள் கா... கூ ....எனக் குரலெழுப்பி அலறினர்.அந்தத்திருந்திய ஜீவன்களின் சிந்தனையில் நகர மனிதரை விடவும் காட்டுமிருகங்களே மேல் என்ற உணர்வு மேலோங்கி நின்றது.அவர்களது ஏக்கம் நிறைந்த தேடுதல் ......

"குரங்குகளுக்காக வந்தோம்
குரங்குகளால் சிறைப்படுத்தப்பட்டோம்
மீண்டும் குரங்காக மாறினோம்.

இன்று முன்தோன்றிய மூத்தகுரங்குகளால் காட்சிச்சாலையில் நிறுத்தப்படவுள்ளோம்.எம்மை மீட்க அந்த மிருகமீட்பர்கள் தரிசனம் தரமாட்டார்களா? என்பதாகத்தான் இருக்கவேண்டும்.

முற்றும்

## மனிதம்

**மனிதத்தை நேசிக்கின்றேன்**
**மனிதத்தை யாசிக்கின்றேன்**

**அண்ணன் என்பார்**
**தம்பி என்பார்**
**தங்கை என்பார்**
**நண்பன் என்பார்**
**நண்பி என்பார்**
**நட்பு!!!**
**அது என்ன?**
**மனிதம் புரியாமல்**
**மனிதத்தை நேசிக்கின்றேன்**
**மனிதத்தை யாசிக்கின்றேன்**
**மனிதம் புரியும்வரை........**
**யாசிப்பேன் நேசிப்பேன்.**

**..........................................ஜனன்**




படிப்பகம்

www.padippakam.com

# மலர்தல்
# வாடல்
# தெரிதல்

பூமி



'வித்தியாசங்களுடனேயே உலகம் – இதில்
ஒருவாறு ஒத்திருப்பவை குழுக்கள்.
முற்றத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும்
எறும்புகளுக்கிடையே அகப்பட்ட
ஒரு
தேங்காய்ப்பூப்போல..........ஒரு மனிதன்.
மலர்ந்தும்
வாடியும்
ஞானித்தும் கொண்ட.....
ஒரு ஈழத்து அகதியின்
வடதுருவ அனுபவங்கள்.'

டென்மார்க்கில் வந்திறங்கியாயிற்று. கைகாட்டிய இடமெல்லாம் சென்றும், இருந்தும், படுத்தும், தந்தனவெல்லாவற்றையும் உண்டும், கேட்டனவெல்லாவற்றிற்கும் ஆமென்றும், இல்லையென்றும் வாழ்ந்த அந்த நாட்கள்.கூப்பன் விகிதத்தில் கிடைத்ததும் முதன்முதல் அவர்கள் எனக்கு அறிமுகப்படுத்திய "பிறின்ஸ்" எனப்படும் ஒருவகை சிகரட்டை குடித்துக்கொண்டே அழுதபடி வீட்டுக்குக் கடிதமெழுதுவதும், அவற்குப் பதில் கிடைக்கும்போதும் அழுதுகொண்டே இன்னொரு சிகரட்டைகுடித்தும் வாழ்ந்த காலம்.

துன்பத்திலும் இன்பத்திலும் என்கூடவே கையோடு நின்று எரிந்து முடிவது அந்த சிகரட் ஒன்றேதான்.அந்த அகதிமுகாம் அழகானது.அதில் இன்னொருவர் குடியிருந்திருந்தால் அதை "வீடு" என அழைக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் அங்கு வசித்தவர்கள் எல்லோருமே என்னைப்போன்றவர்களே எனபதனால் அதை அகதிமுகாம் என அழைத்தனர். அதனால் எனக்கொன்றும் கவலை இல்லை.
ஆனால் அந்த வீடு ......அதுவல்லவா பாவம்.எனக்காக தன்பெயரையல்லவா இழந்தது.
வாழ்வதற்கு நாடுகள் இல்லாதவர்கள் வாழும்இடங்களை "வீடு" என அழைத்தலாகாதோ..........
என்னவோ....அது சரியானதும்தான்.

நான் அங்கு சும்மாதான் அசைந்துகொண்டிருந்தேன்.சுற்றிவரக்கிடந்த காடுகள், ஒற்றைத் தெருக்கள், நானே நடந்து....நடந்து உருவாகிப்போன அடிப்பாதைகள் இவற்றோடு நடந்து..... நடந்து...மேலும் கீழும், நாலாபக்கமும், விழிகள் திரிந்தாலும் எனது மனம்மட்டும் வற்றுத் தண்ணீர் நண்டுபோல மாறிமாறி ஓடித்திரியும்.

ஆனால் அந்தநாட்களுடன் கிடந்த முடிவற்ற சோகம், நூலும், வாலுமில்லாத கடதாசிபோல காற்றோடு சண்டைபிடிக்கும் வாழ்வு, ஏனோ தானோ என்ற சிரிப்பு....ஆனால் வயிற்றுக்குமட்டும் குறைவற்ற நிச்சயம்.அந்த நாட்கள் எனக்குப்பிடித்தவை.கனதியானவை.நினைவில் அழியாதவை. அவை ஏராளம்.....அந்த ஏராளம் சோகத்திற்குள் தினமும் ஆழ்ந்தும், மிதந்தும் வருவது ஒருமுகம். அது எனது ஒருவயதுப்பாலகனது.அவனைப்பிரிந்து வாழ்ந்தநாட்களில் அந்த நுங்குமுகம் எப்போதும் எனக்குள்ளேதான். அது சிரிக்கும், அழும்,தவழும், ஏதோசொல்லும்...

நான் என்ற இந்த ஈழத்துஅகதியை அந்தநாட்களில் அதிகம் உலுப்பிய முகம்: அந்த நுங்குமுகம்தான்.

முகாமில் அதேபேச்சு. அதே விருப்பங்கள்.புதிதாய் எனக்கென்றிருந்தது அந்த "என்னோடு வாடுதல்"தான். நான் தினமும் சுற்றித்திரியும் அந்தக்காடுகளைவிட்டு எட்டிப்பார்த்தால் அங்கே ஒருவீடு தெரியும். இடையே கோதுமைவயல்கள் நீண்டிருந்தன.ஒருவனைத்தனிமை ஆக்கிர மித்துக்துக்கொள்ளும்போதுள்ள ஏகாந்தவெய்யிலில் ஆக கண்ணீர்கூட வந்தவுடன் வற்றிவிடு கிறது.மேலும், கீழும், நாலாபக்கமும் பார்த்துக்கொண்டே அக்காட்டிடை "என்னோடு வாடி" நாய்க்கு வேலையுமில்லை நிற்கநேரமுமில்லை என்பதுபோல எனதுவாழ்வு போய்க்கொண்டிரு ந்தது.

அது ஒரு இலைதுளிர்காலமென்பதால் அக்காட்டினுள்ளே பார்ப்பதற்கு ஒரு அழகிய விடையமிருந்தது.

அது இதுதான்.

கீழே புற்கள்.அதன்நடுவே ஒரு என்னளவுமரம். அதன்கிளைகள் எட்டித்தொடும்படியாக இலைகளை உதிர்த்துவிட்டுநின்றது. "குளிர்ந்தால் எனது ஜக்கற்றை தரவோ" என்றால் அது காற்றைக்கூப்பிட்டு தன் தலையை ஆட்டிவைக்கும். இங்ஙனம் நாங்கள் நன்கு பழக்கமானோம். சுகம்பார்த்துக்கொண்டோம்.ஒருநாள் பார்த்தால் ஒரு குறுணிக்கல்போல கட்டியாய் இருக்கும். இன்னொருநாள்பார்த்தால் அம்மா தன்சேலையில் முடிந்துவைத்திருக்கும் காசுப்பருமனுக்கு வந்திருக்கும்.இன்னொருநாள் அதைப்பார்த்தால் "இப்பதான் சந்தையால வாறன்" என்பதுபோல கொஞ்சம் விரிந்திருக்கும். அடுத்தநாள் பார்த்தால் ஒருகுழந்தையில் ஆடும்சிரிப் பென்ன கிளையில் நின்று பசியஇலைகள் ஆடிக்கொண்டிருக்கும்.

நான் அக்காடுகளில் கண்டு சந்தோசப்பட்டது இது ஒன்றைத்தான்.
பின்பொருநாள் .......நான் "என்னோடு வாடிக்கொண்டிருந்தபோது" அங்கு ஒருத்தியை சந்தித்தேன். அவளைப்பற்றி அடுத்த காகத்தில் எழுதுகின்றேன்.

.................தொடரும்.................



படிப்பகம்

www.padippakam.com

**இளைஞர் பக்கம்**

*வீடும் வெளியும்*

*புலம்பெயர்ந்த நாடுகளில் இரு வேறுபட்ட புதியசமூகச் சூழலுக்குள் இடர்ப்பட்டு நிற்கும் தமிழ்அகதிகளின் இரண்டாவது சந்ததி பற்றிய கவனஈர்ப்புக்காகவே இந்தப்பக்கம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.*

*புலம்பெயர்நாடுகளில் அந் நாட்டினத்தினரிடையே வளர்ந்துவரும் இளஎழுச்சிக்கான காரண காரியங்களை ஆய்வுக்குட்படுத்துவோர்; அச்சமூகங்களை யும் சந்ததிரீதியாகப் பாகுபடுத்தியே ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.ஏனெனில் பிரச்சனைகளின் காரணங் கள் வேறுவேறானவைக ளாக காணப்படுதலேயாகும் குறிப்பாக தமிழ்சமுதாயத்தின் குடும்பக்கட்டமைப் புக்குள் நின்றுநோக்கினால் அது மிகவும் அதிகரித்த இடைவெளியை கொண்டிருப்பதனை காணலாம்.*

*அவற்றை இனங்காண்பது என்பதுவும் கடினமான விடையமாகும்.*

*ஆகவே அந்த இளைஞர்கள் தாங்கள் அனுபவிக்கும் இருவேறுபட்ட உலகத்தின் நன்மை தீமைகளை.............................*

*"வீடும் வெளியும்" என்ற இப்பக்கத்தினூடாக கலந்துகொள்கின்றார்கள்.*

*காகம்*

செல்வி:தி.சி.வாணி எழுதுவது:
14 வயது
டென்மார்க்

ஐரோப்பாவிலும் மற்றும் வெளிநாடுகளிலும் வாழும் இளம் தமிழ்பெண்கள் தமிழ் கலாச்சாரமுறைப்படி சுதந்திரமாகவும், சந்தோசமாகவும் ஒருகுறையுமில்லாமல் வாழ்கின்றார்கள் என நினைத்திருக்கின்றோம்.

ஆனால்.........இங்குள்ள இளம்தலைமுறைகள் இரு வெவ்வேறு கலாச்சாரத்துள் வாழும் சிறுபறவைகள். இதை நாம் உணரவேண்டும்.

இங்கு இப்பக்கத்தில் இவ்விரு கலாச்சாரத்திலுமிருந்து நல்லவிடையங்களையும், என்னைக் கவர்ந்தவைகளையும் இங்கு எழுதுகின்றேன்.இங்குள்ள இளம் தமிழ்ப்பெண்கள் தமிழ்கலாச்சாரத்தை மதித்து அதன்படி வாழ்கின்றார்கள். எனக்கும் அவை பிடித்தவை தான்.

முக்கியமாக காலையில் எழுந்து சமையலில் அம்மாவிற்கு உதவிசெய்வதும், தீபாவளி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு இவைகளில் கலந்துகொள்வதும் மற்றும் இந்துசமய கடவுள்களுடைய கொண்டாட்டங்களுக்கு உதவுவதும், சகோதரர்களுடன் ஒற்றுமையாகவும் சிலவிடையங்களில் கண்டிப்பாக இருப்பதும் தமிழ்க்கலாச்சார உடுப்புக்களும் எனக்கு மிகவும் பிடித்தவையாகும். மற்றும் கலாச்சாரவைபவங்கள், திருமணச்சடங்குகள், பூப்புனிதநீராட்டுவிழாக்கள், இவைகளில் கலந்துகொள்ளும்போது; நாம் எங்கிருந்தாலும் நம் தமிழ்க்கலாச்சாரத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பும் கிடைக்கின்றது.வீட்டில் அப்பா அம்மா நமது பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் எடுத்துச்சொல்வதும் எனக்குப்பிடித்தவிடையம்.

மற்றும் நான்வாழும் அடுத்த கலாச்சாரம் டெனிஸ் கலாச்சாரமாகும். இதில் எனக்குப்பிடித்ததில்; முதலாவதாக "TIME IS GOLD" எந்த இட



படிப்பகம்

www.padippakam.com

த்திலும் அலுவலகமோ, பாடசாலையோ, புகையிரதநிலையமோ குறிப்பிட்டநேரத்தில் வேலைகள் ஆரம்பமாகும்.மற்றும் ஒரு நண்பரை சந்திக்கவேண்டுமென்றாற்கூட ஏற்கனவே அவருடன் கதைத்து அதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளவேண்டும்.

பொய்பேசுவது, ஒருத்தரை ஒருத்தர் ஏமாற்றுவது கிடையாது.ஆண்களும்பெண்களும் அன்பாகவும் நல்லெண்ணத்தோடும் பழகுவார்கள்.

பாடசாலைகளில் எல்லோரும் ஒற்றுமையாக இருப்பார்கள்.ஏதாவது பிரச்சனையென்றால் கலந்துபேசித்தீர்ப்பார்கள்.ஆசிரியர்கள் மிகவும் அன்பாக இருப்பர்கள்.கண்டித்து ஒருவார்த்தை சொல்வதைவிட அன்பாகச்சொல்லி மாணவர்களைத்தம்பக்கம் இழுக்கும் வல்லவர்கள். எத்தனைவயதுடையவர்களாக இருந்தாலும் மாணவர்களுடன் இருக்கும்போது தாமும் மாணவர்களில் ஒருவராக மாறிவிடுவது இங்கு எனக்குப்பிடித்தவையாகும்.

இந்தஇதழில் வீட்டிலும் – வெளியிலும் எனக்குப்பிடித்தவிடையங்கள் பற்றி எழுதினேன். அனுத்தஇதழில் எனக்குப்பிடிக்காத விடையங்கள் பற்றி எழுதுவேன்.

தி. சி. வாணி

---

இன்று வாணிக்கு 14 வயது.இவர் டென்மார்க்குக்கு வரும்போது 7 வயதுடையவராக இருந்தார்.இவரின் தமிழார்வத்தினால் இன்று இவரால் இந்த நிலையில் தமிழை எழுதமுடிகிறது. இவர் எழுதியனுப்பியமூலப் பிரதியில் ஒருசில பிழைதிருத்தங்களே திருத்தப்பட்டது.இவரது தமிழார்வத்திற்கு காகத்தின் வாழ்த்துக்கள்.

---

நீங்களும் இந்த இளைஞர் பகுதிக்கு எழுதுங்கள்.......................காகம்

**புரிதல்** —————— ஆதவன்

ஒருநாள்......
24 மணிநேரம்......
ஒரு மணித்தியாலம்...
ஒரு வினாடி....
கணங்கள் எப்படிக்கழிகிறது பார்த்தாயா !

∴∴

காலத்தின் கழியும் கணங்களை
பாலத்தின் ஒருமூலையிலிருந்து
பார்த்திருந்தோம்.
கீழே ஆறு
நீ பிடுங்கிப்போட்ட இலை
நதி அலைகளுக்கூடே
இன்னும் தத்தளிக்கிறது பார்த்தாயா?

∴∴

இயற்கை....
அழகு.....
பிடுங்கப்பட்ட இலைகள்......
அலைக்கழியும் நான்.....

∴∴

இவற்றில்
எதுபிடிக்கிறது உனக்கு?
20 வருடங்களில்
எத்தனை கணங்கள்.....?

∴∴∴

.......ஆதவனின் உள்வெளி (1985)கவிதைத்தொகுதியிலிருந்து......

---

ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக் கிற சிக்கலான சமுதாய உறவு முறைத் தொடர்புகளைத்தான் சமுதாயம் என்கின்றோம்.

—யாரோ




படிப்பகம்

www.padippakam.com



# நாலுபேருக்குவேலை

க. இலங்காதிலகம்



*2 வது உலகயுத்தத்தில் 6 கோடி யூதர்களின் உயிரைக்குடித்த நாஜிகளின் இரத்ததாகம் இன்னும் தீரவில்லையா? இந்தமகாயுத்தத்திற்குப்பிறகு இன்றுவரை நாடுகளுக்குள் நடந்த யுத்தத்தில் உள்நாட்டுப்போரில் 22 கோடிமக்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். கடந்த 10 வருடத்தில் ஒன்றரைக் கோடி பிள்ளைகள் போரில் இறந்திருக்கின்றார்கள். 1கோடிக்குமேற்பட்ட பிள்ளைகள் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.*
*பெற்றோரை, வீடுகளை இழந்திருக்கிறார்கள். கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயுதவிற்பனையாளர்களோ கோடி கோடியாக சம்பாதித்துள்ளார்கள்......*

நெஞ்சில் திகிலூட்டும் கனவு.திடுக்கிட்டு எழுந்தேன். அவசரஅவசரமாக நேரத்தைப்பார்த்தேன் .......நேரம் 4 மணி.விடியற்காலையில் கனவு கண்டால் பலிக்கும் என்று சொல்லுவார்கள். அப்படியானால் பரணிதாசன்..........

* * *

ஒல்போ (டென்மார்க்கின் ஒரு நகரம்) வைநோக்கி என்மனைவி காரைஓட்டினாள். அவள் அருகில் இருந்த நான் கடந்தகாலங்களில் பரணிக்கும் எனக்கும் ஏற்பட்ட சினேகிதத்தின் தடயங்களைநோக்கி என் எண்ணத்தை அலையவிட்டேன்.............

எட்டுவருடங்களுக்கு முன்பு; டென்மார்க்கிற்கு அகதியாகவந்த நான் CENTER CAMP ல் சாப்பாட்டுக்கியூவில் தட்டுடன்நின்ற என்னை "அங்கிள்!" எனக்கு ஒருஉதவிசெய்யமுடியுமா? என்றான் ஓர் இளைஞன். வயது கிட்டத்தட்ட 20, 22 இருக்கும். சாதாரணமான நிறம்,அழகான உயர்ந்த, மெலிந்த தோற்றம்.

"இப்படித்தான் வாழவேண்டும் என்று ஓர் அந்தஸ்த்தில் இலங்கையில் வாழ்ந்துவிட்டு ஈற்றில் சாப்பாட்டுக்கியூவில் வந்து இந்தநாட்டில் நிற்கிறேனே" என்று ஆதங்கப்பட்டுக்கொண்டிருந்த நான், எப்படி இந்த இளைஞனுக்கு உதவிபுரியமுடியுமென்ற யோசனையுடன் கூர்மையாக அவனைப்பார்த்தேன்.

"அங்கிள் எனக்கு நேற்றிலிருந்து காச்சலாகஇருக்கு டொக்டரிட்டைபோகவேண்டும் இங்கிலீசிலை வடிவாகக்கதைக்கமாட்டன்.. நீங்கள்வந்து கொஞ்சம் உதவிசெய்யுங்கோ.."

"அதுக்கென்ன சாப்பிட்டுவிட்டுப்போவோம்" என்றேன்.கியூவில் நின்றபடியே "உம்முடைய பெயர் என்ன?" என்றேன்.

"பரணிதாசன்" என்றான்.

காலியான ஒருஇடத்தில் எதிரும்புதிருமாக அமர்ந்தோம்.

"தம்பி! நீர் எந்தஊர்....? என்ன படித்தனீர்...?" குடும்பப்பொறுப்பு இருக்கா....? என்ன செய்யப்போறீர்........? என அடுக்கினேன்.

"அங்கிள் அது ஒரு பெரியகதை அதை பிறகு சொல்கிறேன்; முதலில் டொக்டரிடம் போவோம் என்று உரிமையோடு அழைத்தான்.

பகல் 11 மணியிருக்கும். ரூம்கதவை தட்டும்



படிப்பகம்

www.padippakam.com

சப்தம்கேட்டது. கட்டிலில் உட்கார்ந்து கொண்டுவந்திருந்த நாவல்களில் ஒன்றை படித்துக்கொண்டிருந்தநான் எழுந்துசென்று கதவைத்திறந்தேன்.
பரணி நின்றுகொண்டிருந்தான்.
"உள்ளேவாரும் எப்படி இருக்கு இப்போ" என்றேன். "கொஞ்சம் பரவாயில்லை "என்று சொல்லிக்கொண்டு என்னருகில் அமர்ந்தான்.
"உங்களுக்கும் காச்சல் தொத்தப்போகிறது" என்றான் சிரித்துக்கொண்டே.
நானும் சிரித்துக்கொண்டே அவன் முகத்தைப் பார்த்தேன்.
"நீங்கள் கேட்டகேள்விகளுக்கு பதில்சொல்லத்தான் வந்தனான். எங்கட ஊர் கொக்குவில்.இந்துக்கல்லூரிக்குப் பக்கத்தில் சொந்தவீடு இருக்கு.அப்பா இந்துக்கல்லூரியில் தான்படிப்பிக்கின்றார்.எனக்கு 21 வயது இரண்டு அக்கா; மூத்தவா அச்சுவினி 25 வயது, இரண்டாவது கார்த்திகா 23 வயது. இரண்டு பேருக்கும் நான்தான் சீதனம் தேடவேண்டும். அப்பா அடுத்தவருடம் ரிட்டயர் ஆகிவிடுவார். அம்மா வீட்டோட இருக்கிற 2பரப்பு தோட்டத்தைகவனிக்கிறா.நானும் ஏ.எல் எடுத்து 2 டி 2சியுடன் சித்தியெய்தியும் தரப்படுத்தல் காரணமாக வாசிட்டியில் இடம்கிடைக்கவில்லை.நான் வேலை தேடித்தேடி அலைந்தேன். கிடைக்கவில்லை.பின்பு ஒரு இயக்கத்திற்கு வான்ஓட்டினேன்.சாவகச்சேரி அட்டாக்கை முடித்தகையோடு இராணுவத்தில் பிடிபட்டு பின் ஒருவாறுவெளிக்கிட்டு அத்தோடுவிடாமல் அக்காவுக்கு சீதனமாகச்சேர்த்துவைத்திருந்த 50 ஆயிரம் ரூபாவை ஏஜென்சியிடம் கட்டி எனது அப்பாவால் டென்மார்க்கிற்கு நாடுகடத்தப்பட்டேன்.
வந்து 5 நாட்களாகுகின்றது. எனக்கு கடனில்லை.ஆனால் கடமைகள் இருக்கு...." என்று கதையை முடித்தான் பரணிதாசன்.

*******

இங்கு எங்கள் இருவருக்கும் இந்நாட்டில் புகலிடம் கொடுத்துள்ளதாக கடிதங்கள் வந்தன.இந்தஏற்பாட்டின்படி இருவரும் வெவ்வேறு இடங்களுக்கு ரயில் சினேகிதம் போல பிரிந்தோம்.எங்கள் நட்போ 13 நாட்கள்தான். இந்தப் 13 நாட்களில் பல்வேறு கதைகள். இந்தநாட்டுப் பாசையைப்பற்றி கதைத்தோம். இதை எங்களால் படிக்கமுடியுமா என ஐயப்பட்டோம். சுறாமீன் வாங்கி வறைசெய்யமுடியுமா எனச் சப்புக்கொட்டினோம். இங்கு வேலைவாய்ப்புக்கள் மிகமிகக்குறைவு, 800 கிராம் பாண் 12குரோன்கள்உங்கள் நாட்டைவிட இங்கு வாழ்க்கைச்செலவு பலமடங்கு அதிகம். வருமானவரி 51 வீதம் என்றெல்லாம் பயமுறுத்துகின்றார்களே எங்களால் சமாளிக்கமுடியுமா எனறும் தீவிரமாக ஆலோசித்தோம்.
அப்பா அம்மா அக்காமாரை இனி எப்போ காண்பேனென்று பரணியும், என் மனைவி 3 பிள்ளைகளைகளும் எப்போ டென்மார்க் வருவார்கள் என்று நானும் கவலைப்பட்டோம்.

******

4 வருடங்கள் உருண்டோடிவிட்டன.நானும் பரணியும் அடிக்கடி ரெலிபோனில் கதைத்துக் கொள்வோம்.பரணி 6 மாதங்கள்தான் டனிஸ் படித்தான்.உழைக்கவேண்டும், அக்காமார்களை கரைசேர்க்கவேண்டுமென்று மரபக்டரியில் வேலை தொடங்கினான்.வெளிநாட்டவர்களுக்கு டென்மார்க்கில் மிகவும் இலகுவாகக்கிடைக்கக் கூடியவேலைகளில் இதுவுமொன்று.இவனது நாலுவருடச் சேமிப்பில் அக்காமார் இருவருக்கும் திருமணம் நடந்துவிட்டது. பரணி வளர்ந்தோர் கல்விநிலையத்தில் மாலைநேரங்களில் படித்து 9ம், 10ம், வகுப்பில் நல்ல மார்க்குகளுடன் சித்தியெய்தினான்.

இந்த ஆர்வமும், திறமையுமுள்ள இளைஞனை மீண்டும் சந்திக்கவேண்டுமென்ற ஆர்வம் என்னைத்தூண்டிக்கொண்டிருந்தது. தன்கடமைகளை நிறைவேற்றுவதற்காக உழைத்துக்கொண்டு, தனக்கென்று ஒரு வழியை அமைக்க மொழியைக்கற்றுவரும் இந்த



படிப்பகம்

www.padippakam.com

வாலிபனை "ஒருமுறை எனனிடம் விஜயம் செய்" என்று பலமுறை அழைத்தும் நேரமில்லை அங்கிள் ஆனாலும் உங்களுடன் நிறைய க்கதைக்கவேண்டும் ஒருநாளைக்கு வருகிறேன்" என்றான்"

******

அந்தஒருநாளும் வந்தது.........

அது ஒரு முத்தமிழ்விழா. என்னைக்கண்டு ஓடிவந்து அங்கிளென்று கையைநீட்டினான். நீட்டிய கரங்களை வாஞ்சையோடு பிடித்து குலுக்கி முதுகில் தட்டியும்கொடுத்தேன். எங்கள் கவனம் விழாவில் இல்லை. நீண்டநாட்களின் பின் சந்திக்கும் நாங்கள் அதிகம்பேசவண்டுமென்று விரும்பினோம்.மண்டபத்தைவிட்டு வெளியேவந்து ஜனசஞ்சாரமற்ற மரநிழலில் போடபபட்ட வாங்காகத்தேடிச்சென்று அமர்ந்தோம்.

"அங்கிள் எங்கள் நாட்டுப்பிரச்சனை எப்போது தீரும்? இன்னும் கனகாலம் எடுக்குமோ ......?" இது அவனது கேள்வி.

இன்னும் ஆரம்பக்கட்டத்தில்தானே இருக்கிறோம்பேச்சுவார்த்தை சண்டை என்று நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி ஓடுதேயல்லாமல் ஏதும் ஒரு உருப்படியான திட்டத்தை யாரும் இன்னும் முன்வைக்கவில்லையே.நாடு நாளுக்குநாள் தேய்ந்துகொண்டு போகிறது புலம்பெயர்மக்களோ ஒரு புதுச்சமூகமாக மாறிக்கொண்டு வருகின்றார்கள். நாட்டிலுள்ளவர்களில் பெரும்பகுதியினர் குண்டடிபட்டுச்செத்தும், மனநோய்க்கு ஆளாகியும், நோய்வாய்ப்பட்டும், உண்ண நல்ல சத்துணவின்றி நலிந்தும் மெலிந்தும் போக இன்னொருசாரார்........."இடைமறித்து பரணி

"அது இல்லை அங்கிள் என்றைக்கோ ஒருநாள் பிரச்சனை தீருமோ தீராதோ?

........கட்டாயம் தீரும்.தீராத பிரச்சனையே இல்லையப்பா. ஆனால் என்னுடைய காலத்தில் தீருமா என்பதுதான் எனக்குப்புரியவில்லை......" என்றேன் நான்.

"ஏனென்றால் அங்கிள்.....என்னுடைய வீட்டுப்பிரச்சனை தீர்த்திட்டன். அப்பா எனக்கு கல்யாணம் பேசுகின்றார். நான்தான் அங்கிள் 2 வருடங்கள்போகட்டுமென்று கடிதமெழுதியுள்ளேன்.நானும் ஏதாவது தொழில் பழகவேண்டும்.எனக்கென்று ஒரு இலட்சியம் வைத்திருக்கிறேன்.அந்த இலட்சியத்திற்குதேவையான மூலதனத்தையும் அறிவையும் நான் தேடவேண்டும்.பிரச்சனைதீர்ந்து நாட்டுக்குப் போகும்போது "சுரண்டவந்திட்டான் சொகுசாகவாழ்ந்திட்டு.........." என்று ஒருசொல்லு சொல்லக்கூடாது." உணர்ச்சிவசப்பட்ட என அன்புக்குரிய இளைஞனை சமாதானப்படுத்திவிட்டு இரண்டு கொக்கோகோலா வாங்கிவரப் போனேன்.

ஒரு கோலாப்போத்திலை பரணியிடம் நீட்டிக்கொண்டு ஆவல் மிகுதியால் ....

"அப்படி என்னப்பா ....உனது லட்சியம்.. சொல்லும்" என்றேன்.

......நாட்டுப்பிரச்சனை தீரவேண்டும். கொக்குவிலுக்கு நான் போகவேண்டும்.அங்கு இருக்கும் நான்கு வறியகுடும்பத்துத் தலைவர்களுக்கு வேலைவாய்ப்பும் நல்ல ஊதியமும் கொடுக்கக் கூடிய ஒரு தொழிலை ஆரம்பிக்கவேண்டும். அவர்களுக்கு ஒரு சராசரியான மனிதன் வாழக்கூடியமுறையில் நல்லவீட்டுவசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.இந்த இலட்சியம் நடைமுறைப்படுத்தப்படும்போது என்னுடைய குடும்பத்தாருடன் பல குடும்பங்கள் பயன்பெறுவார்கள். நான் இங்குபெறும் அறிவு எனது நாட்டுக்கு பயன்பெறவேண்டும்.

நான் பல நாட்களாக சிந்தித்து எடுத்த என்னுடைய எதிர்கால இலட்சியம்.......என்ன சொல்கிறீர்கள் அங்கிள்? " என்றான்.

எல்லோரும் ஏதோஒருபோர்வையைப்போர்த்திக் கொண்டு ஏழைமக்களை எப்படியெல்லாம் உறிஞ்சலாம் என்று திட்டம்போடும்போது .... உன்னுடைய இந்தத்திட்டம் வானுயர்ந்து நிற்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு தமிழ்மகனும் சிந்திக்கத்தொடங்கிவிட்டால் சிதைந்துபோன தாயகத்தை கட்டிஎழுப்ப ஒன்று இரண்டு வருடங்களே போதுமானது.மற்றநாடுகளின் உதவிகேட்டு, வட்டிகட்டி மாளத்தேவையில்லை. என்றேன்.

ஆனால் என்னுடைய நண்பர்கள் .......
"நான் இளமையில் அனுபவிக்கவேண்டியதை அனுபவிக்காமல் பிதற்றுகிறேனாம். நல்ல ஒரு படிப்பைப் படித்துவிட்டு ஒரு நல்லவேலையை தேடி உழைக்கட்டாம்.அல்லது கனடாவில் போய் செட்டில் ஆகு.....காசுகூட இருந்தால்உந்த விசர்வேலையை செய்யாதே உனக்கென்னபலன் என்றெல்லாம் கூறுகின்றார்கள்......" என்றான். அவனையும் அவனது இலட்சியத்தையும் மனதார வாழ்த்தினேன்.

ஆம் பரணி சுடுமண்ணில் பிறந்தவன். புழுதிமண்ணில் பிறந்தவன்.இவனிடம் சுடுபுழுதிமண்ணின்வாசனை வீசுகிறது.அதனால்தான் அவனால் இப்படி ஒரு திட்டத்தை இலட்சியமாக உருவாக்கமுடிந்தது. தான்பிறந்த நாட்டை வளப்படுத்தவேண்டும், தன்நாட்டு மக்களை வாழவைக்கவேண்டுமென்ற என்ற அவனது எண்ணம், அவா அவனைச்சிந்திக்கத்தூண்டியுள்ளது.சுடும்புழுதிமண்ணில் பிறந்தவர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். சோம்பேறிகளல்ல.மணற்தரையிலும், உவர்தரையிலும் செம்மண்ணை கொட்டி பயிர்களை வளர்த்து செழுமையாக வாழ்கின்றார்கள்.எந்தத்துறையென்றாலும் அந்தத்துறையிலே தங்கள் முத்திரையைப்பதிக்கவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள்.நிலத்தில் ஊற்றெடுக்கும் நீரானது அந்தந்த மண்ணின் இயல்பானதன்மையோடு விளங்குவதுபோல இவனும் விளங்கினான்.

❖❖❖❖❖❖

ஒல்போ ஆஸ்பத்திரி........................ பரணி கார் அக்சிடன்டில் செத்துப்போனான்.அன்று அவன் சொன்னானே...."நாட்டுக்குப்போக ரெடியா இருங்கோ சந்திரிக்கா அரசமைச்சிட்டா.. நான் இன்னும் 2வருடங்களில் யந்திர தொழில்நுட்ப எஞ்சினியராக வெளியே வருவேன். இலங்கைக் காசு 8 லட்சம்ரூபா இப்போ என்னிடமிருக்கு நாலுபேருக்கு தொழில்வாய்ப்பை கொடுப்பதால் 30பேர்களாவது பயன் அடைவார்கள் என்று கணக்குப்போட்டவன் இன்று 4பேர் என்னைத்தூக்கட்டும் சுமந்துகொண்டுபோகட்டும் என்று சரிந்துவிட்டான். அவனைப்பார்த்து என்னால் தாரைதாரையாக கண்ணீர் ஓடவிடத்தான் முடிந்தது.இந்தநாட்டில் எனக்கு "ஓ" வென்று கதறியழ, மண்ணில் வீழ்ந்து புலம்பியழ சுதந்திரமில்லை.
ஒப்பாரிவைத்து அழுதால் எங்களுக்கு நாகரீகம் தெரியாதென்று வெள்ளையன் சிரிப்பானாம்.நான் முன்புபோயிருந்த ஒரு மரணவீட்டில் இரண்டு தமிழர்கள் குசுகுசுத்தது என் ஞாபகத்திற்கு வந்தது. என்னால் ஏன் தமிழர்களுக்கு இழுக்கென்று என்னைக் கட்டுப்படுத்திக்கொண்டேன்.

இப்படி எத்தனை இளைஞர்கள் யுவதிகளுக்கு பரணியைப்போன்ற இலட்சியதாகம் ஏற்படும்.

முற்றும்

**அனைவருக்கும்**
**நத்தார்**
**புதுவருட**
**பொங்கல்**
**வாழ்த்துக்கள்**



படிப்பகம்

www.padippakam.com

# கைதவறிப்போகும் ஓர் தலைமுறை.

கே . எஸ் . துரை.

பல வியத்தகு மாற்றங்களை உள்ளடக்கிய டென்மார்க்கின் புதிய கல்விக் கொள்கைஇவ் ஆண்டு எதுவித ஆர்பாட்டமும் இல்லாது வெளி வந்துள்ளது .1 முதல் 9 ம் வகுப் புக்கள் வ ரை வாராந்தம் 235 பாட நேர அலகுகளை இத்திட்டம் வரைவு படுத்தியுள்ளது . இதில் டெ னி ஸ் மொழிக்கு 60 பாட நேர அலகுகள் என்பதைக் கண்டிப்பாக வலியுறுத்தியு ள்ளனர் . கல்விக் கொள்கையில் எத்தகைய மாற்றங்களை ஏற் படுத்தினாலும் தாய்மொழிக் கொள்கையில் மைய அரசு தனது பிடியைக் கடுகளவும் தளர்த்தவில்லை என்பதை இக் கல்வி அறிக்கை எமக்குமிக த் துல்லியமாகப் புலப் படுத்துகிறது . இனப்பற்று , ஒருமைப்பாடு , உலக சகோதரத்துவம் என்று வெளியே பல நாடுகள் முழங்கினாலும் உள்ளுக்குள்ளே தத்தம் இன மேன்மையையே பே ழையுள் பெருமையாகப் போற்றுகின்றன . இவ்வாறு போற்றுவது வெறியன்று நெறியே..! என் னும் வாதத்திற்கு இக்கல்விக் கொள்கையும் அழகிய சான்றாகும் .

டென்மார்க்கில் சுமார் ஒரு தசாப்த கால வரலாறு கொண்ட ஈழத் தமிழர்கள் இந்த இறு கிய கல்விப் பின்னணிக்குள் நின்று , தமது மொழி , கலை , பண்பாடு போன்றவற்றைப் பே ணுவ து அவர்கள் முன் வைக்கப் பட்டுள்ள கனிந்த சிரமமாகும் . தமிழ்க் குழந்தைகளின் சிந்தனை மொழியாக வீற்றிருக்கும் தகுதியை டெனிஸ் மொழி மிக இலகுவாகக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது . இரண்டாவது மொழியாக இருக்கும் தகுதிக்காக டொச் , ஆங்கிலம் , பிரெஞ்சு ஆகிய மொழிகளுடன் தமிழ் போராடிக் கொண்டிருப்பது பெரும்பான்மைத் தமிழர் அறியாத இரகசியமாகஉள்ளது . உச்சரிப்பில் தமிழ் மொழி ஊற்றெடுக்கும் இடமும் , டெனிஸ் மொழி ஊற்றெடுக்கும் இடமும் இருவேறு முரண்பாடான தளங்களாகும் . ஒரு பிள்ளை டெனிஸ் மொழியில் ஆழமான ஆற்றலை அடையும் போது , அக் குழந்தையிடம் ஏற்கெனவே உள்ள தமிழ் மழலை மொழி யாக மாறும் இது விதி . இதையே நாம் தற்போது வளர்ச்சியடைந்த நமது தமிழ்ப் பிள்ளைகளி டம் மழலையாகக் கேட்டு மகிழ்கிறோம் . இருபத்தைந்து வயதிலும் இதே மழலையை இப்பிள் ளைகள் பேசினால் எப்படியிருக்கும் என்ற கற்பனையும் , கூட்டுக் குள் குயிலை வைத்து அ டை காத்த காகமொன்று அதைக் கொத்தி விரட்டும் விதியைக் கூட ஏற்க முடியாதிருக்கும் அவலமும் ஒன் றுக் கொன் று சமாந்தரக் காட்சிகளேயன்றி வேறல்ல .

இத்தகைய வேகத்தில் பிள்ளைகள் தாய் மொழியை இழந்து சென்றால் அவர்கள் தமிழர்கள் என்று தம்மை அடையாளப் படுத்த இனித் தமது பெயர் ஒன்றையே பயன் படுத்த வேண்டி வரும் என்று அண்மையில் ஈழத்தைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர் எழுதியிருந்தார் .தற்போது இங்கு பிறக்கும் தமிழ்ப் பிள்ளைகளில் 90 வீதமான பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர்களே சூட்டப் படுவதில்லை என்ற அதிர்ச்சி மிகு உண்மையை அவர் அறிந்து கொள்ளாததென்னவோ தற்போதைக்கு நலமே . இந்த நிலையிலிருந்து தமிழர்களைக் காத்துக் கடைத்தேற்ற நாடு முழுவதும் பல சங்கங்கள் தோன்றி பணியாற்றுவதைக் காண்கிறோம் . பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் கூடிய கவனமெடுத்துத்



படிப்பகம்

www.padippakam.com

தமிழைப் போதிக்க வேண்டும் ! என்ற குரல் எல்லா விழாக்களிலுமே ஓங்கி ஒலிக்கக் கேட்கிறோம் . கோஷங்களும் விழாக்களைப் போலவே வந்து வந்து போய்விடுகின்றன . இருப்பினும் நடை முறையில் எதுவும் இல்லை .இது ஏன் ? இருபது நூற்றாண்டுகளாக தமிழர் சமுதாயம் இழைத்து வரும் ஒரு பெரும் வரலாற்றுத் தவறை இன்றைய பெற்றோர் உடனடியாக மாற்றி அமைப்பது எப்படி? என்னும் ஆராட்சிக் கோணத்தில் இதுவரை இக் கோஷங்கள் சிறிதளவுதன்னும் மாற்றி அமைக்கப் பட்டதாக தெரியவில்லை .

சாதாரண குடும்பத் தலைவன் ஒருவனிடம் இந்தப் பெரிய பொறுப்பை வழங்கி விட்டுஅமைதி அடையும் சமூகம் , கடந்த காலங்களில் தமிழ் மொழிக் கற்கையில் தான் விட்ட தவறுகளைத் திரும்பிப் பார்த்து , ஓர் வளமான சிந்தனையோடு நோய்க்கான பரிகாரத்தைத் தேட முற்படவில்லை . தமிழர்களோடு நீண்ட வரலாற்றுப் பாரம் பரியம் இருப்பது போல ,தமிழ் மொழியைக் கற்பது தாழ்வான செயலே என்ற எண்ணமும் நீண்ட பாரம்பரியமாகவே இருந்து வருகிறது . முடியுடை மூவேந்தர்கள் புகழ் கொண்ட தமிழகத்தில் தமிழைப் போதிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டதாக எந்த வரலாற்றுச் சான்றுகளுமே இல்லை . சமஸ் கிருதத்தைப் போதிக்க அந்தணர்களை அமர்த்தி மானியம் வழங்கியதாகக் கூறும் சோழப் பேரரசர்கள் கூட தமிழ் மொழியைக் கற்பிக்க மானியம் வழங்கியதாக தமது தகவல்கள் எதிலுமே பொறித்து வைக்கவில்லை . ஈழத்திலும் 13 ம் நூற்றாண்டுக்குப் பின்னரே தமிழ் மொழிக்கு அரச ஆதரவு கிடைத்ததாக வரலாறு கூறுகிறது .

இவ்விதம் தமிழர் தம் தாயக நிலங்களிலேயே தமிழைக் கற்கும் வரலாறு தடுமாற்றத்துடனேயே நடந்து வந்திருக்கிறது . தமிழைக் கற்றதனால் தானடைந்த துயரைக் கூறவந்த படிக்காசுத் தம்பிரான் ( 1686 — 1723 ) என்ற புலவர் ,

**தட முலை வேசையராய் பிறந்தோம் இல்லை**
**சனியான தமிழை விட்டுத் தையலர்தம்**
**இடமிருந்து தூது சென்று பிழைத்தோமில்லை**

எனத்தரும் செய்தி தமிழைப் படிப்பதை விட வேசியராயிருப்பது மேல் என்ற நிலைக்குப் போகும் அளவிற்கு அன்று தமிழ் கற்றோர் நிலை தாழ்ந்திருந்ததையே காட்டுகிறது . கவிச் சக்கரவர்த்தி கம்பர்கூட மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ ? உனை அறிந்தோ தமிழை ஓதினேன் ? என்றே பாடினார் . கம்பராமாயணம் எழுத ஆதரவு வழங்கியது சடையப்ப வள்ளலே அல்லாமல் சோழப்பேரரசு அல்ல என்பது சிந்தனையைத் தூண்டும் செய்தியாகும் . சங்க காலத்திலிருந்தே தமிழைப் பாடும் புலவர்கள் பெற்றது கொண்டு சுற்றம் ஓம்பும் ஓர் பிரிவினராகவே சித்தரிக்கப் பட்டுள்ளனர் . இவைகள் தமிழினத்துக்கு தமிழ் மொழிபற்றி இருந்த தாழ்வான பிரக்ஞையின் வெளிப் பாடுகளேயாகும் .

தமிழர்கள் அன்றுமுதல் இன்றுவரை ஏதோ ஒரு தமிழல்லாத மொழிக்கே அடிமைகளாக இருக்கும் நோயாளிகள் . என்று ஆய்வாளர் க . ப . அறவாணன் கசப்பான செய்திகள் பலவற்றை துணிச்சலுடன் எழுதியுள்ளார் . சைனர் காலத்தில் பிராகிருதமும் , பௌத்தர் காலத்தில் பாளி மொழியும், வைதிகர் காலத்தில் சமஸ்கிருதமும் , விஜயநகர காலத்தில் தெலுங்கும் , குடியேற்றக் காலத்தில் ஐரோப்பிய மொழிகளுமே தமிழரின் மேன்மை தங்கிய ஆட்சிமொழிகளாக இருந்திருக்கின்றன என்றும் அவர் மறுக்க முடியாத பல ஆதாரங்களை முன்வைத்துள்ளார் . மேலும் ஆங்கிலம் படிக்காத ஒருவன்



படிப்பகம்

www.padippakam.com

காரியாலயம் போனால் மேல் தட்டு வர்க்கத்திடமே கையேந்தி நிற்க வேண்டும் . கஷ்டத்தை முறையிடக் கடவுளிடம் சென்றால்அங்கும் அவனுக்குப் புரியாத மொழி . வீட்டில் பிள்ளைக்கு திருமணமானால் அங்கும் புரியாத மொழி . மணநிகழ்ச்சி மட்டுமல்ல பிண நிகழ்ச்சிக்குக் கூட தாய் மொழியில் இடமில்லா ஒரு இழி நிலையிலேயே தமிழரின் தாய்மொழிக் கொள்கை இருந்ததாக அவர் சுட்டிக் காட்டுவார்.இதை மேலும் ஒரு படி அதிகமாக சீர் தூக்கினால் நம்மை ஆளும் சட்டங்கள் கூட தமிழர் வகுத்த சட்டங்கள் அல்ல என்ற உண்மையும் வெளிப்படும் . யாழ்ப்பாணத் தேசவழமைச்சட்டங்கள் கூட சீமோன் என்ற ஒல்லாந்தத் தேசாதிபதியின் ஆணைப்படி கிளாஸ் ஐசாக் என்றஒல்லாந்தராலேயே இயற்றப் பட்டதென்பதை யார் மறுப்பார் ?

மேலைத் தேயங்களில் இறக்கு மதியாகும் இந்தியச் சீரழிவுக் கலைகளுக்குள்ளும் , கலை பண்பாட்டுச் சீரழிவிற்குள்ளும் அகப்பட்டுத் தடுமாறும் ஓர் சமூகம் தன்னிடமிருந்து விடுபட்டுப் போகும் தனது குழந்தைகளைக் காப்பாற்றத் துடிக்கும் கடைசிக் குரலே தற்போது மேலைத் தேயங்களில் பலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது . இப்படியொரு குரல் டெனிஸ் சமூகத்திலிருந்து எக் காலத்திலும் எழக்கூடாது என்பதில் விழிப்பு உணர்ச்சியுடன் இருக்கும் சிறிய நாடான டென்மார்க்கையும் , அதன் இறுக்கமான மொழிக் கொள்கையையும் தமிழர் சமுதாயம் தனது வரலாற்றோடு சேர்த்து சீர் தூக்குவது காலத்தின் கட்டாய தேவையாகும் அப்பொழுது தான் தமிழர் உதட்டில் இருக்கும் தாய் மொழிப் பற்று உள்ளத்திற்குள் இறங்கும் . அந்த நிலையில்தான் கைவிட்டுப் போகும் தலை முறையைக் காப்பாற்றும் பயணத்தின் முதலாவது காலடியை சமூகம் சரியான தடத்தில் பதித்துக் கொள்ளும் .

எப்போதாவது தவறிழைப்பது வாழ்க்கை !
எப்போதுமே தவறிழைப்பது வாழ்க்கையல்ல.

∴∴

**எண்ணாத மனல்கள்**

---

ஐரோப்பாவிலிருந்து.......
நாளோடிவந்து
வடகடலலையிடை
என் பயணம் புதைந்தது.
புரண்டுபடுக்க முயற்சிக்கும்
கடல்மீது பாதையிட
பாதையெடுத்துவர
என் ஒற்றைக் கை
அது எங்கோ போயிருக்கிறது.
அதுவரை என்மனம்
கரைப்புழுதிகளை எண்ணிக்கொண்டிருக்கிறது.
ஆழக்கடலிடை
என்கவிதைக்கு
ஒரு கதிரை போடுங்கள்,
அது சிகரட் பற்றவேண்டுமாம்.

[illegible]..........
[illegible]
[illegible]
[illegible]
Baunehøjen 35
3320 Skævinge
Denmark.
TIF: 42 28 90 12



படிப்பகம்

www.padippakam.com

# அறிவது

அன்புடன்________

நாட்கள் மாதங்களாகி ஆண்டுகளுமாகி எங்கள் பிரிவு நீண்டு கொண்டே போகின்றதை என்னால் இப்பொழுது புரிய முடிகின்றது. அன்று நீ பிரிந்த நாளை என்னால் ஓரளவுக்கு ஞாபகப்படுத்த முடிகின்றது. வெகுவிரைவில் இங்கே திரும்பிவிடுவாய் என்று என்னை தேற்றிக் கொண்டதாக ஞாபகம். நம்பமுடியவில்லை இப்படியாகும் என்று.

நாங்கள் ஓடிவிளையாடித் திரிந்த அந்த சூழல் இன்று இல்லை. எல்லாம் தலைகீழாகி விட்டது. சன நடமாட்டம் மிகவும் அரிதாகிக்கொண்டே போகின்றது. நாங்கள் விளையாடித்திரிந்த வயல் வெளிகள் உண்மையிலே வெளியாகிவிட்டது. குண்டு களினால் தாக்குண்டவீடுகள்,பாடசாலைகள், கோவில்கள் இப்படி பல. எனக்கு ஓரளவுக்கு எல்லாம் பழகிக்கொண்டு விட்டது. உனக்கு ஞாபகம் இருக்குமோ தெரியாது. சிறிய வயதில் எங்கள் கற்பனை யெல்லாம் அந்த கடற்கரையும், கடற்கரை மணலும், அருகேயுள்ள தென்னையும். அங்கே விளையாட வேண்டும்; கடல் தண்ணீரில் கால் நனைத்து ஓடவேண்டும். ஏன், பாடசாலையில் ஆசிரியர் ஏதாவது வரையக்கேட்டால் கூட இந்தக் காட்சி யைத்தான் வரைவோம். ஏனோ தெரிய வில்லை, கடற்கரையைப் பார்க்கவேண்டும் என்ற எனது விருப்பம்: இன்றுவரை எனது கற்பனையாகவும், பேப்பரில் வரைந்த சித்திரமாகவும் தான் இருக்கின்றது. அதை என்னால் நெருங்க முடியவில்லை. என்ன! நான் விரும்பும் அந்தக் கடல் 10மைல் களுக்குள் தான் இருக்கிறது. ஆனால் முன்பு சிறியவனாக இருந்தபடியால்



முடியவில்லை. இப்போது பெரியவனாக இருப்பதனால் முடியவில்லை. அம்மா எப்பொழுதும் வீட்டில் இருப்பதையே விரும்புகிறா. அடிக்கடி பங்கரினுள்ளேயோ அல்லது ஆலயங்களினுள்ளேயோ தஞ்சம் அடைவது வழமையாகிறது. அம்மாவின் பார்வையில் இருந்து வெளியே வருவது மிகவும் கஷ்டம். குண்டு வீச்சு விமானங்களும்,ஷெல் தாக்குதல்களும் அம்மாவை என்னை கட்டுப்படுத்த வைக்கின்றன.

அப்பாவின் வாழ்வும் தொழில் இல்லாத நிலையில் முடிந்த வாழ்வாகவே இருக்கின்றது. அதிமாக அவர் மௌன மாகவே இருக்கின்றார். பல விதமான கஷ்டங்களை அனுபவித்து விட்டோம். எதோ ஒன்றை நோக்கி எதிர்பார்ப்புகளுடன் வாழ்வதாக தோன்றுகின்றது. அதிகமான விடயங்களை எழுதலாம். ஆனால் எல்லாம் எங்கள் கஷ்டங்களாகவே இருக்கிறது. அதனால் மனம் இடமளிக்கவில்லை. எனது கடிதம் உனக்கு கவலை தருவதாக இருக்கக்கூடாது என நினைக்கின்றேன். மறக்காமல் எனக்கு எழுது.

அன்புடன்


புதிக் ________



படிப்பகம்

www.padippakam.com

# ஒடுக்கம் - ரவி




ஜெயபாலன் இன்று ஜேர்மனில் இருந்து வருகின்றான். வீட்டுக்கு யாரும் மனதுக்குப் பிடித்தவர்கள் வந்து சில நாட்கள் தங்கப்போகிறார்கள் என்றால் மனதுக்குள் மிகவும் குதூகலம்.

ஜெயபாலன் வீட்டுக்கு வந்ததும் வழமையான உபசரிப்பிற்குப் பின்னர் வெளியில் ஒருமுறை நடந்துவர புறப்பட்டோம். பொதுவாக சில விசயங்களை கதைத்துக்கொண்டு சில பொருட்களை வாங்க பக்கத்தில் உள்ள சுப்ப மார்க்கட்டுக்குள் நுழைந்தோம். பொருட்களை வாங்கிக்கொண்டு நான் கவுண்டரில் வரிசையில்நிற்க ஜெயபாலன் வெளியில் வந்து கவுண்டருக்கருகில் எனக்காக காத்திருந்தான்.

எனக்கு முன் நின்ற டெனிஷ்கார பெண்ணின் முறை முடிந்து எனது முறை வந்தது. விலையடித்து முடிந்து பணத்தை கொடுத்துவிட்டு மேசையில் ஒதுங்கியிருந்த எனது பொருளை எடுத்து அடுக்கத் தொடங்கினேன். அருகில் தனது பொருளை அடுக்கிக்கொண்டிருந்தாள் வரிசையில் எனக்கு முன் நின்ற அந்த டெனிஷ் காரப்பெண். திடீரென நான் பையில் வைக்கவிருந்த பால் பெட்டியை எட்டிப்பறித்தவள் 'என்னுடைய பொருளைத் திருடாதே' என்றாள் சத்தமாக. எனக்கு திகைப்பும் வெட்கமும். வாயில் இருந்து ஒரு வார்த்தை கூட வரவில்லை. ஆனால் காசாளர் இதை கவனித்துவிட்டு 'இது அவனுடையது தான், இதோ உன்னுடையது இருக்கின்றது' என்று அவளின் மேசையில் ஒரு மூலையில் ஒதுங்கி மறைந்திருந்த பால் பெட்டியை எடுத்துக் கொடுத்தார். ஆனால் நான் திருடவில்லை என்று தெரிந்தும் அவள் திருப்தியடையவில்லை. 'இவர்களைப் பற்றி எனக்கு தெரியும். கறுப்பு பன்றி' என்றபடி வெளியே போனாள்.. எல்லோரும் என்னைப் பார்ப்பதை உணர்ந்தேன். தலை நிமிர்த்தி ஜெயபாலனைப் பார்த்தேன். அவன் ஆதரவாக என்னைப் பார்பதுபோல் இருந்தது.

ஜெயபாலன் இலங்கையில் ஒரு காலத்தில் எனது மாணவன். நான் சென்ற கோடைகால விடுமுறையின் போது ஜேர்மன் சென்றிருந்தபோது எனது உறவினரின் வீட்டில் சந்திக்கும் வரை அவனைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. அவனாக என்னை அடையாளம் கண்டு கொண்டு என்னுடன் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். அவனின் வீட்டுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

சென்று வந்தேன். இருவரும் ஒரே ஊரான படியால் கதைப்பதற்கு நிறைய விடயங்கள் இருந்தது. அடிக்கடி சேர்! சேர் என்று விழித்தது எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. தம்பி! இந்த சேர் என்பதை விட்டுவிட்டு அண்ணர் அல்லது வேறு ஏதாவது சொல்லி கூப்பிடலாம் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அவனால் அது முடியவில்லை என்றான். ஆனால் பழைய உறவின் இடைவெளி குறைந்ததை உணரமுடிந்தது. அவனுடன் இருந்து பொழுது போக்கிய 2,3 நாட்கள் மிகவும் சந்தோசமான நாட்களாகவிருந்தது. ஜேர்மனில் இருந்து வரும்போது டென்மார்க் வரும்படி கேட்டிருந்தேன். சில தடைவை ரெலிபோன் மூலம் பின்பு கதைத்திருக்கின்றோம். 2,3 நாட்களுக்குப் முன்புதான் இன்று வருவதாக சொல்லியிருந்தான்.

வகுப்பில் ஜெயபாலன் கெட்டிக்காரனாக இருந்தாலும் குளப்படிகாரன் என்று பெயர் வாங்கியிருந்தான். மற்றவர்களை சீண்டிக் கொண்டே இருப்பான். இதனால் ஆசிரியர்களின் கோபத்துக்கு ஆளாவது அடிக்கடி நடப்பதுண்டு. இது பற்றி ஆசியர்களின் ஓய்வு அறையில் பலமுறை பேசப்படுவதும் உண்டு.

ஒருநாள் மாணவனொருவனின் புத்தகம் காணாமல் போக முறைப்பாடு என்னிடம் வந்தது. ஜெயபாலன்தான் புத்தகத்தை எடுத்ததாக. ஆனால் தான் எடுக்கவில்லை என்றே பிடிவதாதம் பிடித்தான். ஆனால் அவனது செயற்பாடுகள் அவன்தான் செய்திருப்பான் என்று நம்பவைத்தது. பிரம்பு பலமுறை அவன் கையை பதம்பார்த்தும் அவன் ஒத்துக் கொள்ளவேயில்லை. அதிபரிடம் அனுப்பி விட்டேன். அதிபர் அவனை வீட்டுக்கு அனுப்பி வழமையான பாடசாலை சம்பிரதாயங்கள் நடைந்தேறியது.

இது நடந்து சில நாட்களின் பின் அந்தப் புத்தகம் வகுப்பு அலுமாரியின் கீழ் கண்டு எடுக்கப்பட்டது. புத்தகத்தை எடுத்தது ஜெயபாலன் அல்ல என்பதை அறிந்து கொண்டேன். ஆனால் ஆசிரிய-மாண என்ற ஒழுங்கு என்னை பாலனிடம் அந்த உண்மையை ஒத்துக்கொள்ள விடவில்லை. இது பற்றி ஜெயபாலனுக்கு ஞாபகம் இருக்குமோ தெரியாது.ஆனால் அவனைக் கண்ட பின் இது என்னை உறுத்திக் கொண்டேயிருந்தது. இதற்கு காரணம் இங்கு நான் மாணவனாக இருந்த காலத்து அனுபவமோ தெரியாது.

கடல் கண்டங்களை கடந்தும் அதே வகுப்பறைகள் தானா? வெண்கட்டி எழுத்துக்கள் மட்டுமா அழிகின்றது, இல்லை, கரும்பலகைகளும் தான்.

உங்கள் அனைத்து
அச்சுத்தேவைகளுக்கும்

ரூஙி பதிப்பகம்

Tlf: 42 28 98 12



படிப்பகம்

www.padippakam.com

# தோப்புக்கரணங்கள்

முல்லையூரான்

குறுநாவல் – தொடர்



## 1

பனையோலை வேச்சல் வீடு. காலைப் பனி எரியும் புகையாக ஊதிக்கொண் டிருந்தது. கூடுதிறக்கும் நேரத்திற்குள் செட்டைகளை அடித்துக்கொண்டு வீட்டுச்சேவல்கள் கூவிப்பேசின. முற்றத்து வேம்பின் பதிவுக்கொப்புகளின் பசுங் குழைகளைப் பிடித்துப் கொண்டு சூரிய ஒளி தாவி ஒளிர்ந்தது. குருவிகள் எழுந்து வெகு நேரமானதை கீச்சல்களின் வேகம் அறியப் படுத்தியது. மாமரத்து அணில்களின் தெறிக்கும் சப்தம் நெஞ்சத்தைக் குத்தியது. நெஞ்சைக் கிள்ளியபடி விரிந்து கிடந்தது குடில். முன்னால் ஒரு குப்பைப் பூக்களுடன் பெரியதொரு சிதம்பரத்தை.

சர்...சர்...ரென முற்றத்தில் குனிந்து கூட்டும் விளக்கு மாற்றின் ஓசையைக் கேட்டபடி முற்றத்தோரத்தில் அந்த நந்தியாவட்டை அள்ளிப் பூத்திருந்தது. அவை எல்லாம் வெள்ளைப் பூக்கள். அவை அழகுதான். ஆனால் ஏதோ சோகத்தையல்லவோ விழுங்கியும் விழுங்காமலுமுள்ளன.

பொன்மணி தான் கூட்டி வைத்த கஞ்சல்களை அந்த நந்தியாவட்டை மரத்தடியில் குவிக்கிறாள். குப்பை குவிப்பதில் அவளின் கைலாவகத்தினை பார்த்தால் குறைந்தது நாற்பது வருட அனுபவத்தினைக் கணிக்கலாம்.

பொன்மணி குப்பை கூட்டிய களைப்பில் நாரியை நிமிர்த்திய போது விண்ணாங்கம் தட்டிக்கடப்புக்கப்பால் வீதியால் கனகையா பால்கறக்க மாடுகளை சாய்த்துப் போவது தெரிகின்றது.

வீதியால் எழுந்து வரும் மாட்டுச் சாணக வெப்பவாசனை அந்தக் கிராமத்தின் காலைச்சுவாசம். எதிர் வீட்டுக்காரி திண்ணை மெழுகிற்காக பன்னாடைகளில் சாணி அள்ளிச் சேர்ப்பதும் பொன்மணியின் கண்களில் வேலியிடுக்கோட்டைகளின் ஊடாக தெரிகின்றது.

சென்றவாரம்தான் புதிதாக திண்ணைகளும், வீடும் மெழுகி பூவரசமிலைச் சாற்றினால் மேல் மெழுக்கிட்டு வைத் திருந்தாள் பொன்மணி. டென்மார்க்கில் இருந்து தனது தமையன் நவாவும் அவரது மனைவியும், மகளும் நிரந்தரமாகவே தங்கிவிடுவதற்காக நேற்றிரவே வந்திருந்தார்கள். அவர்களுக்காகவே இந்த விசேஷ வீட்டு மெழுக்கைப் பொன்மணி முடித்து வைத்திருந்தாள்.

அம்மா...! எனக்குரலெடுக்கும் பசுங்கன்றின் குரல்கேட்டு பதில்குரல் கொடுத்துக்



படிப்பகம்

கொண்டு வந்து கடப்பில் நிற்கும் வெள்ளைப் பசுவை கண்டுகொண்டு, அடுக்களைக்குள் குனிந்து கொண்டவள் கையில் ஒரு மண்முட்டியுடன் திரும்பி கடப்பைத்திறந்து வெள்ளைச்சியுடன் பட்டிப்பக்கமாக போகிறாள்.

பால்தாகத்தையும், தாயின் உரசலுக்கா கவும் காத்துக்கிடந்த அந்த கறுப்புக் கன்று கட்டை இழுத்து கழுத்தை நெரிக்கும் கயிற்றுடன் சண்டை போடுகின்றது. பக்குவமாக பக்கத்துக் கட்டையில் தாய்பசுவைக் கட்டிவிட்டு கன்றை அவிழ்த்து விடுகின்றாள்.

தாய்பசுவின் எச்சில் குளிப்பில் அந்தக் கன்றுக்குட்டி நனைகின்றது. கன்றுக் குட்டியை இழுத்துக் கட்டிக்கொண்டு, கொண்டு வந்திருந்த குளிர்நீரால் தாய்ப் பசுவின் மடிகழுவி இலாவகமாக குந்தி யிருந்து பால் கறக்கிறாள் பொன்மணி. டென்மார்க்கில் பால் கிடைக்குமோ கிடைக்காதோ...? அதுபற்றி பொன்மணிக்கு ஒன்றும் தெரியாது.

காலைப்பால் காய்சி தனது மருமகள் டனிஷாவை எழுப்பிக் கொடுத்து........ அந்த வெண்கலச்சிலை குடிப்பதைப் கண்ணிறையப் பார்க்க வேண்டுமென்ற ஆசை பொன்மணியின் பால்கறக்கும் வீச்சில் தெரிந்தது.

நேற்றிரவுதான் பொன்மணியின் ஒரே ஒரு சகோதரனான நவா வற்றாப்பளைக்கு திரும்பியிருந்தார். 25ஆண்டுகளுக்குப் பின் தனது ஒரே ஒரு அண்ணாவை யும், மனைவி சுமதியையயும் மகள் டனிஷாவையும் அழைத்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கிறார்.

அவர் டென்மார்க்கில் வாழ்ந்தபோது எதுவித கடிதங்களோ அன்றியும் மற்றவர்கள் தங்கள் உறவினருக்கு உதவியதுபோல பணஉதவியோ செய்யாது போனாலும் பொன்மணிக்கு அண்ணன் மீது கோபமேதுமில்லை.

டென்மார்க்கில் தற்போது பிரச்சனை ஏற்பட்டதால் தான் அவரும் குடும்பமும் நாடுதிரும்ப வேண்டி ஏற்பட்டிருக்கிறது. அல்லது அங்கேயே சந்தோசமாக இருந்திருப்பார்.

ஈழப்போராட்டத்தில் தனது ஒரு காலை இழந்து நிற்கும் தனது மகன் அர்ச்சுனனோடு பொன்மணி தனியாகவே வாழ்ந்து வந்திருக்கிறாள். இன்று தனது தமையனார் நவா நாடுதிரும்பியதில் பொன்மணிக்கு மகிழ்ச்சியே. பால் கலையத்துள் நேர்கோடாக விழும் பாலின் சப்தம் பால்முட்டி நிறைந்திருக்கின்றது என்பதனை சொல்லிற்று.

காலிழந்து நிற்கும் தனது மகன் அர்ச்சுனனைப் பற்றிய கவலைகளில் நாளும் துயில்போகும் பொன்மணிக்கு....... இப்பொழுது ஏதோ ஒரு விடிவாக..... அவள் மருமகள் டனிஷாவின் வருகை இருந்தது.

தனது ஒற்றைக்கால் அர்ச்சுனனையும், டனிஷாவையும் இணைத்துப் பார்த்து மகிழ்ந்தாள் பொன்மணி. கலையத்துள் பால் முட்டி நுரைத்து நிறைந்தது, விரல்கள் ஓய்ந்தன. அவிழ்ந்து விடப் பட்ட அந்த கறுப்புக்கன்றுக்குட்டி தாய் மடியை இடித்திடித்து பால்குடித்து மகிழ்ந்தது.

எவ்வளவு நேரம் விடிந்து, எட்டுமணி முல்லைத்தீவு பஸ்சும் சந்திக்கடை வளைவில் வளைவது கேட்டது. பள்ளிக்கூடப்பிள்ளைகள் செல்லும் ஆரவாரம் கேட்டு மறைந்தது.

எதிர்வீட்டுச் சிவபாதம் காலையிலேயே இரும்படிக்கும் சப்தம் கேட்கிறது. இந்தக் காலத்தில் தான் அவனுக்கும்

www.padippakam.com

வேலை அதிகம். விளைச்சல் அறுவை முடித்து வண்டில்களுக்கு புது வளையம் மாற்றல், வண்டில் திருத்தும் விவகாரங்கள் நடக்கின்ற காலம்.

இந்த இரும்படிக்கும் சப்தத்துக் குள்ளால் தனது சைக்கிளில் வறுகிக்கொண்டு போகின்ற முத்தையா வாத்தியாரின் அவசரிக்கும் வேகம் பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டதைக் குறித்தது.

பாலைக்காச்சி கிளாசில் எடுத்துக் கொண்டாள் பொன்மணி. பயணக் களைப்புத்தான், நன்றாக தூங்கி விட்டார்கள். இனிமேல் எழுப்பவேண்டும் என்ற துணிவோடு வீட்டுக்குள் நுழைகின்றாள் அவள். இரண்டு அறைகளுடன் கூடிய வீடு அது. முன்னால் இரண்டு திண்ணைகள் பக்கம் பக்கமாக இருந்தன. மண்ணெண்ணை விளக்குப் புகை படிந்து முகட்டுக்கூரை கறுத்திருந்தது. அர்ச்சுன் படுத்தபாய் சுருட்டி ஒருமூலையில் நின்றது.

சுவரில் தொங்கும் நாட்காட்டியின் மேல் வேலுடன் நிற்கும் முருகன் கோமணத் துடன்தான் நின்றார். கீழே திருநீற்றுக் கூடு தொங்கியது.

அவர்கள் படுத்திருக்கும் கதவை திறக்கும் நோக்கத்திற்கு முன்னால் பொன்மணியின் செருமல் வந்து தட்டி நின்றது. கதவு திறந்து கொண்டது.

அவள்தான். டெனிஷா கொட்டாவி விட்டபடி வெளியே வந்தாள்.

கையில் சூட்டுக் கொண்டிருந்த பால் கிளாசை நீட்டினாள் பொன்மணி. அதை ஒற்றைக் கையால் வாங்கிக்கொண்டாள்.

பருவத்தில் புடைத்த தோள்களின் வெளியரும்புகளை அவள் போட்டிருந்த இரவுடையின் பூக்கள் கடித்துக் கொண்டிருந்தன.

தோளின் பின்புறத்தில் கிடக்கும் கட்டைச்சுருள் மயிரை அவளின் அடுத்த கை லாவகமாக தடவிக் கொடுத்தது.

*'ரக்' என்றாள் டனிஷா.

நெட்டிமுறிந்தது போல டனிஷா சொன்னது புரியாமல் மறுகையில் கிடக்கும் கிளாசோடு தவித்தாள் பொன்மணி. ஆனாலும் அவளின் முகத்தில் சிரிப்புக் கிடந்தது.

டனிஷா.............. வீட்டின் ஒரமாக நடந்து பின்புறமாக வந்தாள். அப்போதென்று அந்தப்பனை ஒரு காவோலையை எறிந்து தொலைத்தது.

சின்ன அதிர்ச்சிதான். சுற்றிவந்து கட்டிக் கொண்ட காற்றோடு கதைத்துக் கொண்டிருந்தாள் டனிஷா. பக்கத்து வீட்டுக்குள் வேலியிடுக்கால் பார்த்துவிட்டு ஒருத்தி மறைவது தெரிந்தது.

கைகளை மெதுவாக இறுக்கிக் கட்டிக் கொண்டாள். வேலிக்கதியால்களின் படர்ந்து கிடந்த சிகப்புக்கடதாசிப்பூக்கள் அவள் கண்ணுக்குள் புகுந்தன.

கொஞ்சம் மறுபக்கம் பார்த்தாள்.

கை ஊன்றுகோலொன்றின் துணையுடன் அர்ச்சுனன் நிலத்தில் குத்திக்கிடந்த அலவாங்குக் கூரில் தேங்காயை புதைத்து தோள்த்தசை விரிய விரிய உரித்துக் கொண்டிருந்தான்.

மறுபக்கம் திரும்பினாள்.

வெள்ளைக்கொழும்பான் மாமரத்துக்குப் பக்கத்தில் கிணறு இருந்தது. பெண்களுக்குத் திலகம்போல கிணற்றுக்கு வாளி. •

---

*'ரக்' (tak) – நன்றி



படிப்பகம்

www.padippakam.com

அது முன்னால் இருந்தது. டனிஷாவின் ஆர்வத்தை அது தூண்டவே மெல்லக் காலெடுத்தாள். கால்கள் குளிர்ந்தன. இராப் பனியில் நனைந்து கிடந்த புழுதிமண் டனிஷாவின் மிருதுவான பாதங்களை தொட்டுச் சீண்டியிருக்க வேண்டும். மீண்டும் வீட்டினுள் ஓடி, தனது காலணிகளை மாட்டிக் கொண்டாள்.

காலணிகள் முற்றத்துமணலில் புதைந்து சறுக்கின. டனிஷாவின் இரவாடைக்குள் புகுந்துகொண்ட காற்று குழப்படி செய்தது. பதிந்து போய்க்கிடக்கும் வெள்ளைக்கொழும்பான் மாமரக் கொப்பு களுக்குள்ளால் குனிந்து, நிமிர்ந்து கிணற்றடிக்கு வந்தாள்.

அது என்ன என்பது புரியாத ஒரு ஆச்சரியம். நிலத்துக்குமேல் நிமிர்ந்து வட்டமிட்டுக்கிடந்த கிணற்றுக்கட்டை எட்டிப் பார்த்தாள். அந்த ஆழக் கிணற்றுக்குள் நீர் தெரிந்தது. அம்மா வைக்கூட்டி வந்து கேட்டு அறிந்து கொள்ளதென்ற முடிவோடு திரும்பியவள், கிணற்று முற்றத்தில் பாசியும்சேறுமாய் சிதம்பிக் கிடந்த நிலையைக் கண்டு டனிஷாவுக்கு வாந்தி எடுப்பது போலிருந்தது. கண்களை அதனின்றும் விலக்கிக் கொண்டவளாய் செழித்து மதாளித்துக் கிடந்த வாழைகளிலும், கைகளினால் தொட்டுப் பறிக்கத்தக்கதாகக் நெருங்கிக் கிடந்த செவ்விளநீர்க்குலைக ளிலும், மஞ்சட்பழங்களை காட்டியபடி நின்ற எழுமிச்சையிலும், சற்றுத் தள்ளிக் கிடந்த சேலைதோய்க்கும் கல்லிலும் தென்னங் கிடுகளினால் உயர்த்தப் பட்டிருந்த கிணற்றடி மறைப்பில் தாவித் தாவிச் செல்லும் அந்தப் பிலாக் கொட்டைக்குருவியிலும், வீட்டுவளவு வேலியைக் கடந்து கிடக்கும் பனந் தோப்பில் ஒருவன் லாவகமாக தாவி உயர்ந்துபோவதிலும் டனிஷாவின் விழிகள் பதிந்தது. முதன்முதலில் ஒருகுழந்தை ஆகாயத்தில் அண்ணார்ந்து நட்சத்திரங் களைக் கண்டது போன்ற ஒரு ஆரவார மிகுதியால் மீண்டும் மீண்டும் பார்த்துப் பார்த்து மகிழ: அவள் இமைகள் கைதட்டிக் கொண்டன.

கிணறுதான் டனிஷாவுக்கு பிடித்திருந்தது. கிணற்றுப்படியில் காதுதேய்ந்துபோய்க் கிடந்த வாளியை எடுத்தாள். அது கட்டப் பட்டிருந்த கயிற்றின் மறுமுனையை கைகளில் இறுகப்பிடித்தபடி அடித்துச் சப்தமிட்டுக்கொண்டு சென்ற வாளி தண்ணீரில் பெருத்த ஓசையோடு விழவும் டனிஷா இறுக்கப்பிடித்திருந்த மறுமுனை யின் கயிற்றையும் விட்டுவிட்டு பயத்தோடு ஓடவும் சேற்றில் சறுக்கி விழுந்து விட்டாள்.

கிணற்றடிச்சப்தம் கேட்டு டனிஷாவின் தகப்பனார் நவாவும், தாய் சுமதியும், பொன்மணியும் ஓடிவந்தனர். டனிஷா சேற்றிலிருந்து எழுவதற்கு பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தாள். மாமியார் பொன்மணி உரிமையோடு டனிஷாவைத் தொட்டுக்தூக்கி சேற்றினைத் துடைத்தாள்.

டனிஷாவின் தாயார் சுமதி கடுகடுத்த முகத்தோடு அயல் எடுபடக் ஏதோ சொல்லிக்கத்தினாள். "அது டனிஷ்மொழி யாக" இருந்தது. சுமதியின் உரத்த குரலுக்குப் பதில் சொல்வதுபோல பின் வீட்டு நாவல்மரத்திலிருந்து ஒரு மந்திக் குரங்கு கத்திக் கொண்டது.

"ஒரு ஆன வீடோ வாசவோ....? கூட்டிக் கொண்டு வந்திட்டார்" என்ற சுமதியின் பார்வை மாமரத்தோடு சாய்ந்துகொண்டு நின்ற அர்ச்சுனனை கண்டு திடுக்குற்றது. அவள் திடுக்குறக் காரணமிருந்தது.

அர்ச்சுனன் இப்போது காலில்லாதவன் மட்டுமல்ல. அவன் டனிஷாவின் மைத்துனனுமாயிற்றே!

– தொடரும் –



படிப்பகம்

www.padippakam.com

## கிரகணம் — கரவைதாசன்

இப்போது –
வீட்டினுள்ளே விளையாடி விளையாடி
சலித்துப்போன பிள்ளைகள்
விறாந்தாவுக்கு வந்துவிட்டார்கள்.

என்ர கடைக்குட்டி
பாய்ந்து பாய்ந்து குத்துகிறான்.
பக்கத்துவீட்டு நோஞ்சான்குமார்
குத்து வாங்கி வாங்கி திணறுகிறான்.
நடுவிலானும் பறந்து பறந்து குத்துகிறான்.

அங்கே – என்ர மூத்தது ரேவதியும் நிக்குது.
அதுவும்சேர்ந்துதான் இந்த விளையாட்டு.

அதுக்கு என்ர கடைக்குட்டிகளைப்போல்
குத்தவும் தெரியாது.
குத்து வாங்கவும் ஏலாது.
ஆனால்............

குத்து வாங்கி வீழ்ந்து கிடப்பவனைப் பார்த்து
மூன்றுதரம் நிலத்திலே தட்டி
குத்தியவனின் கையை உயர்த்திப்பிடித்து
விளையாட்டினை முடித்து வைக்கிறதில
அதுக்கொரு சந்தோசம்.
மீண்டும் என்ர கடைக்குட்டி
பாய்ந்து பாய்ந்து குத்துகிறான்.
பக்கத்துவீட்டு நோஞ்சான்குமார்
திணறித்திணறி இப்போது
வீதியிலே இறங்கிவிட்டான்.
நோஞ்சான் திணறித்திணறி
இப்போ–திமிறிவிட்டான்.

ஐயோ! அம்மா இது என்ர கடைக்குட்டி.
ஐயோ! அப்பா இது என்ர நடுவிலான்.
ஐயோ! என்ர மூக்கு–இது என்ர மூத்தது.

மூன்றும் ஓடி வருகுதுகள்.
மூத்ததிற்குத்தான் மூக்கில பெரிய காயம்.
மூன்றையும் இழுத்துக்கொண்டு
பக்கத்துவீட்டுக் கதவைத் தட்டுகிறேன்.
எல்லோருமாக தேடுகிறோம்
குமாரைக் காணவில்லை.
ஆனாலும்
நாளைப் பகலோடு.............

⁂⁂⁂

## செய்வீரா! — பொன்னண்ணா

கண்டம்தனைவிட்டு
மறு..கண்டம்......
கணப்பொழுதில் பறந்தடிக்கும்
ஏவுகணை செய்வோரே.......!

அண்டம்தனைப்பிளந்து
அடிஆதாழம் தனையழிக்கும்
அணுக்குண்டைச்செய்வோரே!
அகிலத்துப்பெரும்சபையில்
அமர்ந்திருக்கும் பெரியோரே!
மனித.........
உள்ளம்தனில் இருக்கும்
உண்மைதனை அறிந்து
உலகுக்குச் சொல்லவல்ல
ஓர் அளவுகோல் செய்வீரா!
ஓர் அளவுகோல் செய்வீரா!

⁂⁂

## பொற்காலம் — மெய்யன்

வேண்டும் பொருள் சேர்த்துவிட்டோம்
வீணுக்கேன் வம்பு என்று விலகியுலகாழுகின்ற
கலகம் நிறை தமிழர்களின் கருங்காலம்
பொற்காலம் ஆகிடுமா அவையோரே!

இளம்மொட்டுக்கள் கருகி அங்கு சிட்டுக்களெல்லாம்
பட்டென்று பாடையிலே பாராமல் போகையிலே
கட்டுக் குலையாமல் குரக்கன்புட்டுப்போலிருக்கின்ற
தமிழர்களின் தற்காலம் பொற்காலம் ஆகிடுமா?

தாலிகளை இழந்து தாய்க்குலங்கள் தவிக்கையிலே
தாலிப்பவுண் போதாதென்று தத்தளித்து
போலிவாழ்க்கை வாழுகின்ற தமிழர்களின்
தற்காலம் பொற்காலம் ஆகிடுமா அவையோரே!

⁂



படிப்பகம்

www.padippakam.com

காகம்

## அடுத்தஇதழில்

H.C.Andersen கதை

ஆதவனின்பார்வையில் சினிமா

காத்திருந்தநேரம் –சிறுகதை

மனதோடு பேசுதல்– கவிதை

மலர்தல் வாடல் தெரிதல்–அனுபவம்

தோப்புக்கரணங்கள் – குறுநாவல்

அறிதல்–கடிதம்

தமிழின்நிலை

ஐரோப்பாவும் தமிழ்மொழியும்–கட்டுரை

இளைஞர்பக்கம்

நல்லகாலம் எப்போது வரும் – கட்டுரை

சொந்தமண் – கவிதை

மற்றும் பல......................................

■ உங்கள் படைப்புக்கள், அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்; எல்லாரும் வளர...காகம்

# காகம்

*முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்*
*எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.*

*– ஒரு தாய்*


"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 1 – தை 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12
விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200 டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 US
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark.
A/C NO : 35 43 - 38 60 98
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம்: செல்வன் மாறன்


■ சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பாளிகளாவர். காகத்தின் எண்ணங்களை படைப்பாளிகள் பிரதிபலிக்க வேண்டுமென்பதில்லை.

■ ........................காகம்........................



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad, (0900 KHC)"
-51033

Til: Thevan
Dyssegården 5,2,tv
7500 Holstebro

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்